விநாயகர் அருட் பெருமை

(THE GRACE AND GREATNESS OF LORD VINAYAGAR)



ஆசிரியர்

மு. சதாசிவம், எம். ஏ.,

விற்பனை உரிமை:

பாரி நிலையம்,

59, பிராட்வே, சென்னை-1.

விநாயகர் அருட் பெருமை

(THE GRACE AND GREATNESS OF LORD VINAYAGAR)

ஆசிரியர்

மு. சதாசிவம், எம். ஏ.,

விற்பனை உரிமை:

பாரி நிலையம்,

59, பிராட்வே, சென்னை-1.

முருகேச முதலியார் சதாசிவம் (1936)

முதற் பதிப்பு மார்ச்சு 1967

விலை ரூ 1-20.

VINAYAGAR ARUTPERUMAI

பாரி அச்சகம், 127 பிராட்வே, சென்னை-1.

முன்னுரை

தமிழ் நாட்டு மக்களிடையே விநாயகர் வழிபாடு ஏறத்தாழ ஆரும் நூற்ருண்டுக்குப் பிறகே பெருகத்தலைப்பட்டதெனினும் இன்று பிள்ளையார் இல்லாத ஊரே இல்லையெனலாம். பிள்ளை யாரை வணங்காத ஊரும் இல்லை. எந்தத் தொழிலைச் செய்யும் முன்பும் விநாயகரை வணங்கிருல் அத்தொழிலுக்கு இடையூறு ஏற்படாது எனவும், இடையூறு ஏற்படினும் பேரிழப்பு நேராது எனவும் மக்கள் நம்பிவருகின்றனர்.

இக்காலத்திலும் விநாயகரின் பிறப்பைப்பற்றிய புராணக் கதைகளை வைத்துக் கொண்டு பலர் விநாயகரின் தெய்வத் தன்மையைக் குறைத்துக் கூறிவருகின்றனர். விநாயகரின் தோற்றத்தைப் பற்றிப் பலவேறு கதைகள் இருப்பினும் அவர் பரம்பொருளின் வடிவானவர், மூல மந்திரமான பிரணவ வடி வானவர் என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது. பரம் பொருளை எந்த வடிவில் வணங்கிருலும் வணங்குபவரின் உண்மையன்புநிலைக்கேற்ற பயன் தவருது கிடைக்கும் என்பது நம் நாட்டு அருள் நூல்களின் துணிபுரையாகும். எனவே விநாயகரை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுவோரும் பரம்பொருளையே வழிபடுபவராவர்.

பல ஆண்டுகளாகத் தமிழ் நூல்களில் விநாயகரைப் பற்றிய குறிப்புக்கள், விநாயகரைக் குறித்து வழங்குந் தொடர் கள், விநாயகரின் பெயர்கள் முதலியனவற்றைத் தொகுத்து வந்தேன். அவற்றை ‘விநாயகர் அருட்செல்வம்’ என்ற நூலில் அகரவரிசைப்படுத்தி வெளியிட்டுள்ளேன். அந்த நூலை ஆதாரமாகக் கொண்டு உரைநடையில் இந்த நூலைப் பலர் வேண்டுகோளுக்கிணங்க எழுதினேன். எனவே இந்

நூல் பன்னூறு தமிழ் நூல்களிற் காணப்படும் கருத்துக்களின் சாரமாக விளங்குகிறது.

இந் நூலின்கண் இதுவரை விநாயகரைப் பற்றிப் பலரும் அறிந்திராத பல அரிய குறிப்புக்களும், விநாயகரின் திருவுருவைப் பற்றிய தத்துவக் கருத்துக்களும், விநாயகரின் அருட் செயல்களின் தத்துவக் கருத்துக்களும், விநாயகரின் பல பெயர்கள் ஏற்படக் 'காரணங்களும் விரித்து வைக்கப் பட்டுள்ளன. விநாயகரின் பெருமையை உணர்ந்து போற்றும் பக்தர்களுக்கு இனிய கைந்நூலாகவும், மற்றையோருக்கு விநாயகரின் தெய்வத் தன்மையை விளக்கும் ஆராய்ச்சி நூலாகவும் இந்நூல் இலங்கும் என்பது என் நம்பிக்கை.

மிகக் குறுகிய காலத்தில் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த பாரி அச்சக உரிமையாளர் என் இனிய நண்பர் திரு. மு. நாராயணன் செட்டியாரவர்கட்கும், செவ்வனே திருத்தங்கள் செய்துகொடுத்த திரு. முருகேச முதலியார் அவர்கட்கும் என் நன்றி உரியது.

மு. சதாசிவம்.

இந்நூல் உருவாவதற்குத் தூண்டு கோலாயிருந்த தூண்டுகைக்குஞ்சரமான பிள்ளையார் பட்டிப் பிள்ளையாரின் திருவடிகளில் இந்நூலை அன்புரிமையுடன் சமர்ப்பிக்கின்றேன்.

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	அவதார நோக்கம்	...	7
2.	தெய்வக் குடும்பம்	...	14
3.	விநாயகரின் தேவியர்	...	19
4.	உருவ வருணனை	...	21
5.	எண்ணலங்காரம்	...	31
6.	விநாயகரின் உணவு	...	33
7.	விநாயகரின் ஊர்தி	...	35
8.	விநாயகரின் தத்துவம்	...	38
9.	விநாயகரின் பெருமை	...	42
10.	விநாயகரின் அருட்செயல்கள்	...	53
11.	மேருவில் எழுதிய பாரதக் கதை	...	64
12.	விநாயகரின் அடியார்கள்	...	66
13.	விநாயகரின் பெருமைகூறும் நூல்கள்	...	70

விநாயகர் அருட்பெருமை

1. அவதார நோக்கம்

விநாயகரின் அவதாரம் ஏன் ஏற்பட்டது என்பதைத் துணிந்து வரையறுத்துக் கூறுதல் இயலாது. தெய்வங்களின் ஒவ்வொரு அவதாரத்திற்கும் ஏதாவதொரு நோக்கம் அல்லது சிறப்பு இருக்கும் என்று ஆன்ருேர் கூறுவர். விநாயகரின் அவதரர நோக்கம் அவரைப் போற்றிய உயிர்கட்கெல்லாம் பிற உயிர்களால் ஏற்படும் இடையூறுகளை, விக்கினங்களை நீக்குவதுதான் என்று பொதுவாகக் கூறலாம்.

அவதாரமும் மனித மனமும்

'அவதாரம்' என்ருல் ஒருநாமம் இல்லாத பரம்பொருள் அன்பர்களுக்கு அருள் புரிவதற்காகவும், தெய்வத்தன்மையை உலகில் நிலைநிறுத்துவதற்காகவும் உருவத் திருமேனியும் பெயர்களுங் கொண்டு மண்ணுலகில் தோன்றுதல் என்று பொருள். எல்லாம் வல்ல இறைவன் தன்னுடைய அளப்பரிய ஆற்றல்களையெல்லாம் சுருக்கிக்கொண்டு சாதாரண மனிதர்களைப் போலத் தோன்றி உலகில் மற்றவர்களைப் போலவே உலகியல் நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டிருப்பதுவும்

இறைவனுடைய அளவிடற்கரிய ஆற்றலையே காட்டுகிறது.

பக்குவமில்லாத, ஐயம் நிரம்பிய மனித மனங்கள் இறைவனைப் பற்றியும் இறைவனின் அவதாரங்களைப் பற்றியும் பல்வேறு கருத்துக்களைக் கொண்டிருக்கும். அத்தகைய மனங்களைத் தெளிவிப்பதென்பது எளிதில் இயலாததொன்று. 'தெய்வம் உண்டு என்பதோர் சித்தம்' உண்டாவதற்கு முன்பு, ஓர் உயிர் பல பிறவிகளை எடுத்து அனுபவம் பெறவேண்டி யிருக்கிறது. எல்லா உலகங்களிலும் பரம்பொருள் ஒன்றே உண்மையானது, அழியாதது, தலைமையானது என்ற அறிவு ஏற்படுவது ஒரு பெரும்பேறேயாகும். அதனினும் சிறந்தபேறு ஓருயிர் தன்னுடைய உடல், உயிர், உடைமை முதலிய எல்லாவற்றையும் தன்னைப் படைத்த கடவுளுக்கே அர்ப்பணித்துவிட்டுக் கடவுளுக்காகவே, கடவுளை இமைப்போதும் மறவாது உலகில் உயிர்வாழ்தலாகும். அப்பெரும்பேறே செல்வத்துட் செல்வமாகிய அருட் செல்வமாகும்.

பரம்பொருளின் அவதாரம் உலகில் நிகழுங் காலத்தில் பெரும்பாலான மனிதர்கள் அந்த அவதாரத்தை உணர்ந்து போற்றுவதில்லை. கிருஷ்ணன், இராமன், இயேசு கிறிஸ்து, இராமகிருஷ்ணர் முதலிய அவதாரத் தெய்வங்கள் மனிதர்களைப் போலவே வாழ்ந்து வந்தமையின் அவர்கள் காலத்தினரில் பெரும்பாலோர் அவர்கள் தெய்வப் பிறவிகளே என்று உணர்ந்து கொள்ளவில்லை. ஒரு சிலர் உணர்ந்த போதினும் பெரும்பாலாரின் தூற்றுதலுக்கஞ்சி அவர்

களைப் போற்ற முற்படவில்லை. மிகச்சிலரே தெய்வங்களின் அவதாரங்களை அந்த அவதாரங்கள் நிகழ்ந்த காலத்திலேயே உணர்ந்து போற்றி உய்வடைந்துள்ளனர். தெய்வ அவதாரங்கள் நிகழ்ந்து பன்னூருண்டுக்குப் பின்னும் இன்னும் பலர் அந்த அவதாரங்களை உணர்ந்து போற்றுதிருக்கும் போது அவதாரங்கள் தோன்றிய காலத்திலேயே மக்கள் உணர்ந்து போற்றவில்லையே என்று குறைப்பட முடியாது.

இறைவனின் படைப்பிலேயே மிகச் சிறந்த வளர்ச்சியைப் பெற்றுள்ள மனிதவுருவில் தோன்றினுலேயே தெய்வ அவதாரத்தை நம்பாத மக்கள் மக்கள் வடிவும் விலங்கு வடிவும் கலந்து—நரசிங்கமாகவோ, விநாயகராகவோ—நிகழும் தெய்வ அவதாரங்களைப் போற்றுவர் என்று எதிர்பார்ப்பது கூடாது. அறிவுக்கெட்டாத பரம்பொருளைத் தங்கள் சிற்றறிவுக்குள் அடக்கிப்பார்க்க விரும்பும் மக்களிற் சிலர் ''உலகில் கடவுள் இருந்தால் ஏன் அவர் மக்கள் கண்ணுக்குத் தோன்ருமல் (கோழையைப்போல) ஒளிந்துகொண்டிருக்க வேண்டும்? சர்வ வல்லமையுள்ளவர், கடவுள் என்பது உண்மையானுல் ஏன் அவர் நாம் சொல்லுகின்ற வற்றையெல்லாம் செய்ய முடியாமலிருக்கிருர்?'' என்றெல்லாம் கூறிக்கொண்டிருப்பர். ஒவ்வொரு மனிதரின் மனவிருப்பப்படியெல்லாம் நடந்துகொண்டிருக்க வேண்டும் என்ற கடப்பாடு சர்வசுதந்தரனுன இறைவனுக்கு இன்மையின் இறைவன் தன்னிச்சைப்படியே உலகங்களை யெல்லாம் இயக்கிவருகின்ருன். இறைவனின் அருட்செயல்களை,

திருவிளையாடல்களை யெல்லாம் விளக்கிக்கூறிப் பக்தி யில்லாத மனங்களைத் தெருட்டுவது என்பது எளி தன்று. பக்தியுணர்ச்சி பெற்றவர்கள் அப்பக்தியைப் பெருக்கிக்கொள்ள அடியார்களின் கூட்டுறவை நாட வேண்டுமேயன்றிப் பக்தியற்றவர்களின் சேர்க் கையில் காலத்தைக் கழிக்கக் கூடாது. 'மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாத பரம்பொருள் உயிர்களின் நன்மைக்காகப் பலவகையான வடிவங்களில் அவ்வப் போது தோன்றிக்கொண் டிருக்கிருர்' என்று அருட் பெரியோர்கள் கூறியதை நம்பவேண்டும். ஆராய்ச் சிக்கு வேண்டுவது அறிவு; ஆனல் பக்திக்கு வேண்டுவது நம்பிக்கையே. 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.' கடவுளின்மீது நம்பிக்கை பெருகப் பெருக ஆத்மானுபவம் உண்டாகும். நம்பிக்கைக்கு ஏற்றவாறே கடவுளின் அருளினல் ஏற்படும் பயனை நாம் எய்த முடியும்.

நம்நாட்டில் சிலர் 'கடவுளின் வடிவங்கள் எல்லாம் ஒரு சிலருடைய மனத்தில் கற்பனையாக முகிழ்த்த வடிவங்களே' என்று கூறிக் கொண்டிருக்கின்றனர். ஆனல் அடியார்கள் தாங்கள் வழிபடும் தெய்வங்களின் வடிவங்கள் எல்லாம் ஒரு சிலரின் கற்பனையில் உருவெடுத்த உருவங்கள்தாமா என்ற ஆராய்ச்சியில் இறங்குவதில்லை. முன்னோர் மொழிபொருளைப் பொன் னேபோல் போற்றுவதே அடியார்களின் பெருஞ் சிறப்பு. பகுத்தறிவுக் கெட்டாத பரம்பொருளைப்பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பதில் தங்கள் காலத்தைச் செலவிடாமல் அடியார்கள் தங்கள் மனத்திற்குப் பிடித்த கடவுள் வடிவத்தை உண்மை

யென நம்பி அந்த வடிவத்தைத் தங்கள் மனக் கோயிலில் நிறுவி வழிபட்டுப் பக்திசெய்து உய்தியடைகின்றனர்; 'வித்தகம்' பேசாது இறைவனுக்குத் தொண்டு செய்வதில் முனைந்து நிற்கின்றனர்.

விநாயகரின் அடியார்களும் 'விநாயகர் எப்போது எங்கே எப்படித் தோன்றினார்? அவருக்கு ஏன் ஆனை முகமும் பானை வயிறும் ஏற்பட்டன? அவர் ஏன் மூஞ்சூறு வாகனத்தை விரும்பினார்?' முதலிய கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருப்பவர்களுக்குப் பதில் சொல்வதில்அறிவிலும், அனுபவத்திலும் சிறந்த நம் முன்னோரின் கொள்கைகளைப் பின்பற்றுகின்றனர். விநாயகரைப் பற்றி நம் முன்னோர் கொண்டிருந்த கொள்கைகளை நம்பி, அந்த நம்பிக்கையின் அடித்தளத்தில் தங்கள் பக்தி என்னும் கோயிலைக் கட்டுகின்றார்கள். அடியார்களேயன்றி மற்றோரும் விநாயகரைப் பற்றி நம் முன்னோர் என்னென்ன கருத்துக்களைக் கொண்டிருந்தனர், விநாயகரின் உருவத்திருமேனி பற்றி என்னென்ன தத்துவக் கருத்துக்கள் கூறினர் முதலியவற்றையெல்லாம் அறிந்துகொள்ள விரும்புவது இயல்பே. அவ்வாறு அறிந்துகொள்ள உதவும் இந்நூல் முன்னோர்களின் அடித்தடத்திலேயே சென்று விநாயகரின் பிறப்புப் பற்றியும், அவருடைய வடிவம் பற்றியும், அவருடைய அருட்செயல்களைப் பற்றியும் தொடுத்துக்கூற முற்படுகிறது. விநாயகரைக் குறிக்கும் தொடர்கள் அடங்கிய 'விநாயகர் அருட்செல்வம்' என்ற நூலைப் பின்பற்றி இந்நூல் உருவாக்கப்படுகிறது.

பிள்ளையார் பிறந்த வரலாறு

விநாயகர் இம் மண்ணுலகில் எப்போது அவதரித்தார் என்பதை வரலாற்று முறைப்படி அறிய இயலவில்லை. கந்தபுராணம், காஞ்சிப் புராணம் போன்ற புராண நூல்களில் காணப்படும் வரலாறே வழங்கி வருகின்றது.

ஒரு காலத்தில் சிவபிரானும் உமாதேவியும் தாங்கள் வீற்றிருக்கும் கயிலாய மலைமீதுள்ள வசந்த மணி மண்டபத்துள் காணப்படும் ஓவியங்களை ஒருநாள் பார்த்துக் கொண்டே வந்தனர். அவர்கள் பார்த்த ஓவியங்களுள் பிரணவத்தின் ஓவியமும் ஒன்று. அளவிடற்கரிய பெருமை வாய்ந்த பிரணவத்தை உலகத்து மக்கள் எல்லாம் புறக்கண்ணால் கண்டு தொழுவதற்கு ஏற்றவகையில் ஓர் உருவமுடைய தெய்வப் பிறப்பைத் தோற்றுவிக்க வேண்டுமென இருவரும் மனத்துள் எண்ணினர். உடனே சிவ பெருமான் களிறு வடிவத்தையும், உமாதேவியார் பிடியின் வடிவத்தையும் அடைந்து தம்முட் கூடினர். அவ்விருவருக்கும் பிறந்த முக்கண் வேழக்கன்றே பிரணவப் பிள்ளையாராகப் போற்றப்பட்டு வருகிறார். சிவபெருமானின் தடத்த வடிவினில் விளைந்த சுந்தர சொரூப விநாயகரின் தோற்றத்தைப் பற்றிப் பருளை விநாயகர் பள்ளு (42),

"சத்தியுஞ்சிவ மும்பிடியும் மத
தந்தியாகப் புணர்ந்தவந் நாளினில்
மத்தமா வதனத்துடன் ஓங்கார
வண்ணமாய் வந்தஞானக் குழவி"

என்று குறிப்பிடுகிறது.

விநாயக புராணம் விநாயகரின் பலவகையான அவதாரங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. அவற்றை இந்நூலின் வேறோரிடத்தில் காணலாம்.

நமக்குக் கிடைத்துள்ள தமிழிலக்கியங்களுள் முதன்முதலாக விநாயகரைப்பற்றிய குறிப்புக் காணப் படுவது திருஞானசம்பந்தர் தேவாரததில்தான். திருஞானசம்பந்தர் விநாயகரின் தோற்றத்தையும், அவரது அவதார நோக்கத்தையும் பற்றித் தமது தேவாரத்தில் இரண்டிடங்களில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். சம்பந்தரின் திருவாக்கைச் சிவ பிரானது திருவாக்காகவே கொள்வது சைவ நன் மக்களின் மரபு. எனவே சம்பந்தர் கூறுவதை அனைவரும் விருப்புடன் ஏற்றுக் கொள்ளுகிறோம்.

"உமையம்மையார் பெண்யானையின் உருவத்தைக் கொள்ளச் சிவபிரான் ஆண் யானையின் உருவத்தை எடுத்துத் துக்கமும் நோயும் இவ்வுலகைப் பீடியா திருக்கும் பொருட்டுக் கணபதியைத் தோற்றுவித் தருளினர். அக்கணபதி தமது அடியை வழிபடும் அடியாருடைய இடர்களைக் களைபவர்" என்று ஞானசம்பந்தர் கூறும் கருத்துக்களடங்கிய பாடல்கள் வருமாறு :

1. "பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
   வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
   கடிகண பதிவர அருளினன்"

   (சம்பந்தர் தேவாரம் 1—123—5)

2. "செற்றிட்டே வெற்றிச்சேர் திகழ்ந்ததும்பி மொய்ம்புறுஞ்
   சேரேவாரா நீள்கோதைத் தெரியிழை பிடியதுவாய்

2589

ஒற்றைச் சேர் முற்றற் கொம் புடைத்தடக்கை முக்கண்
மிக்கு
ஒவாதே பாய் மாதானத்து உறுபுகர் முக இறையைப்
பெற்றிட்டே மற்று இப்பார் பெருத்துமிக்க துக்கமும்
பேராநோய்தாம் ஏயாமைப் பிரிவு செய்தவன் ”
(சம்பந்தர் தேவாரம் 1—126—6)

இப் பாடல்களிலிருந்து விநாயகரது அவதார நோக்கம் நன்கு தெளிவாகிறது. தமது அடியை வழி படுபவர்களின் இடரைக் கடிந்து அவர்கட்கு இன்புதவு தற்காகவும், உலகில் பெருகிவரும் துக்கத்தையும், நீங்காத நோயையும் பொருந்தாமல் இன்பமுறுவதற் காகவுமே விநாயகர் தோன்றினர். காஞ்சிப் புராணம் ‘நல்லோர்க்கும் தேவர்களுக்கும் ஏற்படும் இடையூற் றைப் போக்க அவரித்தார்’ என்று குறிப்பிடுகிறது :

“நல்லோர்க்கும் வானோர்க்கும் நண்ணும் இடையூற்றுக்கு
இல்லாமை நல்க அவதரித்த எம்மான்”
(10 - 30)

2. தெய்வக் குடும்பம்

ஒரே பரம்பொருள் வெவ்வேறு தெய்வங்களாகக் காட்சியளிப்பது அவருடைய திருவிளையாடல்களுள் ஒன்ருகும். முழுமுதற் கடவுளான சிவபெருமானும், அவருடைய சக்தியான தேவியும் ஈன்ற முதற்பிள்ளை விநாயகர். உலகத்து மக்களைப்போலவே நம் நாட்டுத் தெய்வங்களும் குடும்பத்துடன் வாழ்கின்றன என்று நாம் எண்ணி மகிழ்கிருேம்.

சிவன் மகன்

ஐம்முகத்தானாகிய அரனார் அருளிய ஆனைமுகத்து ஐங்கரன் தந்தைக்கும் பேருவப்பை நல்கும் தலைப் பிள்ளையாக வளர்கிறார். பரமகிருபாகர பரிபூரண பரம்பரனாகிய சிவபிரானின் தோள்மீது உரிமையுடன் விளையாடுகிறார்; அவருடைய மார்பில் ஏறி உலாவரு கிறார். அலகில் இன்ப அருள் விளையாடல் செய் தலைவராகிய சிவபிரான் விநாயகப் பெருமானின் குழந்தை விளையாட்டுக்களைக் கண்டு உள்ளக் களிப்புக் கொள்கிறார். ஆரணம் ஆகமம் பரவும் அமலன் ஆனந்தனான சிவபிரான் அருளிய முதல் மகனும் தந்தையைப் போலவே பூரணப் பரம் பொருளாய் விளங்குகிறார். தந்தையினும் காட்சிக்கு எளியராய் ஊர் தோறும் பலவிடங்களில் வீற்றிருக்கிறார். தம் மிற் றம்மக்கள் அறிவுடைமை வானத்து வாழும் கடவுளர்க்கும் இனிதாகலின் தம் ஞானச் செல்வத்தைப் புகழ்ந்துரைக்கிறார் சிவபிரான்.

தந்தையாயிருப்பினும் எந்தக் காரியத்தைச் செய்யப்புகினும் தனயனை தம்மை முந்த மனத்தில் நினைக்க வேண்டும் என்ற விதியை விநாயகர் ஏற் படுத்திக் கொண்டார். ஒருமுறை அவ்வாறு புதல்வனை நினையாது திரிபுரம் எரிப்பதற்காகச் சிவபிரான் சென்ற பொழுது தம்மை மறந்த தந்தையின் தேரின் அச்சு முறிந்து போகுமாறு செய்தார் செல்வப் பிள்ளையார். தெய்வங்கள் மானிடவர்க்கு விதித்த விதிகளை அத் தெய்வங்களும் பின்பற்றியாக வேண்டும் என்பதே தெய்வ உலகத்துச் சிறப்பு என்பதை இந் நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது.

பெற்ருேரின் பெருமைகள் எல்லாம் பிள்ளைக்குச் சேருவது இயல்பு. 'தந்தை போல் தனயன்' என்ற பழமொழிப்படியே சிவபிரானுக்குரிய அனைத்துக் குணங்களும் விநாயகரிடம் அமைந்துள்ளன. மேலும் சிவபிரானின் திரு மேனிக்கும், விநாயகரின் திருமேனிக்குங் கூடப் பல ஒற்றுமைகள் உள்ளன.

பேயோடாடும் பித்தனுகிய சிவபிரான் தம் பேய்க் கணங்களுக்குத் தலைவனுகக் - கண நாதனுகத் தம் மூத்த பிள்ளையை நியமித்து விடுகிருர்.

சிவபிரானுக்கும் விநாயகருக்கும் சிறிதும் வேறுபாடு பாராட்டாத மரபு இருப்பதனுல் விநாயகரைச் சிவபிரானை வருணிக்கும் முறையில் வருணிப்பதும் சிவபிரான் செய்த செயல்களை விநாயகருக்கு ஏற்றிக் கூறுவதும் சில சமயம் வழக்கமாயுள்ளது. கற்பக விநாயகர் பதிற்றுப்பத்தந்தாதி என்ற நூல் விநாயகரைக் 'கண்ணுதற் பெருமான்' என்றும், 'பகை மூவரண் முன் கோறல் செய் பரமன்' என்றுங் குறிப்பிடுவது ஈண்டு நோக்கத்தக்கது. விநாயகரை 'அராவணிந்த சடைமுடியான்' என்று விநாயக புராணமும் (84—7); 'ஆமை முது கோடு அணிந்தோன்' என்று நாமதீப நிகண்டும் கூறுகின்றன. 'புலியதள் சூடிய இடையான்' என்று விநாயகர் பதிற்றுப்பத்தந்தாதி(14) கூறுகிறது.

கங்காசுபுத்திரனுகிய விநாயகர் (தாயான) அக்கங்கையையே தம் சடைமீது தாங்கியுள்ளார் என்று கூறுவது தந்தைக்கும் தனயனுக்குமுள்ள ஒற்றுமை பற்றியன்ருே ?

மலைமாதருள் மத்தக மாமணி

மலைமகள் ஒரு பிடியின் வடிவெடுத்துச் சிவக் களிற்றைச் சேர்ந்து பெற்ற யானைக் கன்றே விநாயகர். சிந்திப்பவர்க்குச் சித்தி, புத்தி, முத்தி தரும் செல்வச் சேயினைப் பெற்ற சத்தி தன் மூத்த மகனை உச்சி மோந்து முகத்தில் முத்தமிட்டுக் கண் மணியாக வளர்க்கிறாள். தன் பொன்னாகம் படைத்து நீள் பரி மணம் பூத்து இலகும் மார்பில் பீரிடும் பாலமுத பானந் தந்து வளர்க்கிறாள். அன்னை தேவி ஆதி சக்தி மனோன்மணியின் கொங்கை யமுத தாரை பருகி ஆனந்தமடைகிறார் ஆனை மாமுகத்துப் பிள்ளை. சித்தி அருளும் சிவசக்தி தன் குழந்தைக்கு எல்லாச் சக்தி களையும் அளித்து மகிழ்கிறாள். இதனால் விநாயகர் எல்லாச் சித்தியும் தரவல்ல சத்திபடைத்தவராய்ச் 'சித்தி விநாயகர்' என்ற திருப்பெயரை அடைகிறார்.

கங்கா சுபுத்திரன்

உமாபுத்திரனான விநாயகர் உமாதேவியின் மகிணராகிய சிவபிரானின் மற்றொரு தேவியாகிய கங்கையாளுக்கும் மகனாகவே அமைகின்றார். 'சங்கரர் சடையின் மீதிற் கங்கையாள் பெற்ற சித்திக் கணபதி' என்று பாண்டி மண்டல சதகம் பகர்கிறது.

கந்தருக்கு முன்பிறந்த கற்பகம்

சரவணப் பொய்கையிலே ஆறுமுகம் தோன்றுவதற்கு முன்பு வானுலகத்திலே ஆனைமுகம் தோன்றியதாகப் புராணங்கள் கூறுகின்றன. ஆனால் இந்த

அவதாரங்கள் எந்த நூற்றுண்டில் நிகழ்ந்தன என்று வரையறுத்துக் கூறுதல் யாராலும் முடியாது. மனிதன் முதன் முதலில் எப்போது தோன்றினன் என்பதே இன்னும் உறுதியாகக் கூறப்பட முடியவில்லை. இந்நிலையில் தெய்வங்கள் எப்போது அவதாரஞ் செய்தன என்பதை வரையறுத்துக்கூற முடியுமோ? விநாயகரும் முருகனும் பரம்பொருளைப் போல் என்றும் இருந்துவருந் தெய்வங்களே. ஆனல் அவர்களுள் கணபதி முன்னதாகவும், கந்தவேள் பின்னதாகவும் பிறந்தவர்கள் என்று கூறுவதன் கருத்து என்னை? அவர்கள் மக்களுடைய மனத்தில் முன்பின்னுகப் பிறந்தார்கள் என்பதுதான் கருத்து. நியூடன் கண்டு பிடிக்கும் முன்பும் பூமிக்குப் புவியீர்ப்புச் சக்தி இருந்து தான் வந்திருக்கிறது. மக்களுக்கு நெடுங்காலமாகத் தெரியாத அந்தச் சக்தியை நியூடன் கண்டுபிடித்து விளக்கிக் கூறினர். அதுபோலவே மக்கள் முதலில் பிரணவப் பொருளான கணபதியை உணர்ந்து கொள்ளத் தலைப்பட்டார்கள்; பின்னரே கந்தவேளைப் பற்றி உணர்ந்துகொண்டார்கள். நியூடன் கூறுவதற்கு முன்பு புவியீர்ப்புச் சக்தி இல்லை என்று கூறுவது எவ்வளவு அறியாமையோ, அவ்வளவு அறியாமைதான் வாதாபிப்போருக்கு முன்பு அல்லது புராணங்கள் தோன்றுதற்கு முன்பு விநாயகர் பிறக்கவில்லை என்று கூறுவதுமாகும்.

கந்தவேளை வழிபடத் தொடங்குமுன்பு கந்தனுக்கு முன்னுதித்த களிற்றுமுகனைத் துதிப்பது மரபு என்று முருகனடியார்கள் கருதுகின்றனர். உண்மையில் விநாயகருக்கும், முருகனுக்கும் வடிவத்தில்தான்

வேற்றுமையே ஒழியத் தெய்வத் தன்மையில் சிறிதும் வேற்றுமையில்லை. இருவரும் ஓங்கார வடிவாகத் திகழ்கின்ற ஞானப்பெருங் கடல்களே. இருவரும் அன்பர் நினைத்தவுடனே தோன்றி அருள்புரியும் அருட் செல்வர்களே.

முருகவேட்கு முன்னுதித்த முதல்வன் உலகியல் மரபுப்படி வள்ளியம்மையாருக்கு மைத்துனராகத் திகழ் கிறார்.

மணிவண்ணன் மாமருகன்

திருமால் பன்னிரு மகளிரை விநாயகருக்குத் திருமணஞ் செய்து கொடுத்ததால் விநாயகரின் மாம ஞராகத் திகழ்கிறார். எனவே பூவை வண்ணனுக்கே யன்றிப் பூமகளுக்கும் நல்ல முதல் மருமகனாக விநாயகர் போற்றப்படுகிறார். திருமாலின் மகனான மன்மதனுக்கு மைத்துனனாகின்றார்.

நான்முகன் மருகன்

விநாயகர் பிரம்மாவின் மகளிரான சித்திபுத்தி களைத் திருமணஞ் செய்துகொண்டதால் பிரமமூர்த்திப் பிரிய பெரிய மருமகனாகவும் விளங்குகிறார். திருமாலின் மருமகனான விநாயகர் திருமாலின் மகனான பிரம்மா வுக்கும் மருமகனாக அமைந்தது ஒரு வியப்பே !

3. விநாயகரின் தேவியர்

மற்ற தெய்வங்களுக்குப் போலவே, 'பிரமசாரி' யாக விளங்கும் விநாயகருக்கும் அவருடைய அருட் சக்திகளைப் பெண்மைநலம் படைத்த பிறவியாக

உருவகப் படுத்திக் கூறுவது மரபாகிவிட்டது. திருமால், நான்முகன், மரீசி முனிவர் ஆகிய மூவரும் மகிழ்ந்தளித்த கன்னியர் பதினைந்து பேரையும் திருமணம் செய்துகொண்டார் விநாயகர். அவர்களுள் வல்லபை, சித்தி, புத்தி என்போரே முக்கிய தேவியராவர். எல்லாவகைச் சக்திகளும் இம்மூன்று சக்திகளுள் அடங்கும்.

வல்லபை

படைக்குந் தொழிலைச் செய்யும் பங்கயனுடைய செல்வ மகனாகிய மரீசி முனிவர்க்குச் சிவபிரான் அருளினாலே பிறந்த மகளே வல்லபையாவாள். அவ் வல்லபையை விருப்புடன் மணம் புரிந்து தம் வாம பாகத்தில் (இடப் பாகத்தில்) வைத்துக்கொண்டார் வல்லபை கணேசர். பூங்குழல் வல்லபையைத் தம் தொடையிலேயே வைத்திருப்பினும் சிறிதும் காமவிகாரமின்றி சுவிகாரியாய் ஒளிர்கின்றார்.

சித்தி புத்திகள்

பாகம் வல்லபை வைத்த பரமனாகிய விநாயகர் பிரமனின் வேண்டுகோளுக்கிணங்கி அவன் தவஞ் செய்து பெற்ற சித்தி, புத்தி என்ற இரு மகளிரையும் தம்முடைய தேவிகளாக ஏற்றுக்கொண்டார். அம் மெல்லியர் இருவரையும் திருமணம் புரிந்துகொண்டு அவர்களை இருபுறமும் அமர்த்திக்கொண்டார்.

பன்னிரு தேவியர்

அழகுமிக்க மோதை, பிரமோதை முதலிய மகளிர் பன்னிருவரைத் திருமால் விநாயகருக்குத் திருமணஞ்

செய்து கொடுத்தார். அதனுல் திருமாலின் முதல் மருமகனுகும் சிறப்பினைப் பெற்ருர்.

இத்தனை தேவியர் இருந்தும் விநாயகர் பிரமசாரி என்ற பெயரை இன்னும் பெற்றிருப்பது அவருடைய விசித்திர குணங்களுள் ஒன்ருகும்.

4. உருவ வருணனை

விநாயகரின் திருவுருவமே பார்ப்போர்க்கு நகைப்பை விளைப்பதாயிருக்கிறது. முகமோ யானை முகம்; முகத்திற்குக் கீழுள்ள பிற உறுப்புக்கள் மனிதருக்கு இருப்பனபோல் அமைந்துள்ளன. ஆனுல் கைகள் இரண்டிற்குப்பதிலாக நான்கு கைகள் காணப் படுகின்றன. இவ்வாறு அவருடைய உருவத்திரு மேனி விநோதமாக அமைந்திருப்பதால் 'விகட விநாயகர்' என்று அழைக்கப்படுகிருர்.

திருமேனி

விநாயகர் செம்மேனிப் பெம்மானுகிய சிவ பிரானின் புதல்வராதலின் சிவபிரானுக்கு அமைந்த செம்மை நிறம் இவருக்கும் அமைந்தது இயல்பே. எனவே இவருடைய மேனிநிறத்தை அந்திநிறம், தழல்நிறம், பானு (சூரியன்) நிறம், செம்பவள நிறம் என்றும், இவர் மேனியைச் செக்கர் மேனி, ஒளியான திருமேனி, வீசும் ஒளித்திருமேனி, செச்சை மாமலர் பொரு மேனி, செம்பவள மணிமேனி, துப்பு (பவளம்) ஆர் திரு மேனி, செக்கர்வானை மயல் காட்டுந் திருமேனி என்று நூல்கள் வருணிக்கின்றன.

இவருடைய நிறத்தை ஒட்டிக் கனக நிறத்தவன், செந்நிறத்தான், முழுமணி ஒளிவிடு பொலிவு எழு பவளம்மதித்த நிறத்தினர், மணிநிறத்து இறை, பவளத்தந்தப் படிவம் நிகர்த்து ஒளிர் தலைவன், இளங்கதிர் மேனியன், செம்பவள மெய்யன், பவளத்து ருவன், செய்யவுரு வேழ விநாயகன், அந்தியிற் சிவந்த உருவம் உடையோன், செக்கர் இரவித் திருவுருவன், செம்பொன் ஒளியான், கனக நிறத்தவன் முதலான பெயர்கள் இவருக்கு வழங்குகின்றன.

குருக்கத்தி நிறம் தோற்குமளவுக்குச் சிவந்த மெய்யுருவமுடைய மங்கல சொருபனான விநாயகர் தெய்வஒளிமிக்குச் 'சூரியப் பிரகாசர்' போல ஒளிர் கின்றார்.

விகட மேனியரான விநாயகர் யானைமுகத்தைப் பெற்றிருப்பதால் அவருடைய மேனி கார்நிற மேனி யாகவும் திகழ்கிறது. யானையின் நிறத்தை ஒட்டிக் கார்தங்கு திருமேனி என்றும், கார்பூத்த திருமேனி என்றும் அவருடைய மேனி சில கவிஞர்களால் வருணிக்கப்படுகிறது. 'கார் அமர் மேனிக் கணபதி' என்று அபிராமி அந்தாதியும், 'மைவரையனைய மேனி மதகரி முகத்துத் தோன்றல்' என்று கந்த புராணமும் குறிப்பிடுகின்றன.

யானையை ஒரு சிறுமலையாக உருவகம் செய்து கூறுவது புலவர் மரபு. இம்மரபை ஒட்டியே விநாய கரைக் 'குன்றைய ரூபக கற்பகப்பிள்ளை' என்று திருப்புகழும் (495), 'கருமலை எனத்திகழ் கணேசன்'

என்று குருபரதத்துவம் என்ற நூலும் (26—19), 'மலை பொருங் காத்திரன்' என்று பிள்ளைத்தமிழ்க் கொத்தும், 'தடவிகட மத்தகத் தடவரையர்' (விசேடமான அழகிய மத்தகத்தோடு கூடிய பெரிய மலையை ஒத்தவர்) என்று திருப்புகழும் (799) குறிப்பிடுகின்றன.

பொதுவாக நோக்கும் பொழுது இவர் பூதருபத்தையுடையவராயும், மலைபோன்ற உடலினராயும் காணப்படுகிறார். ஆனால் புகழுருவான இவரது உடல் 'சிறந்து ஒளிரும் மங்கல சொரூபம்' உடையதாக விநாயக புராணம் கூறுகிறது.

அன்பிற் சிறந்த அடியார்க்கு விநாயகரின் அங்கங்கள் ஒவ்வொன்றும் அழகு மிக்கவையாகத் தோன்றும். அவை ஒவ்வொன்றையும் பற்றிப்பார்ப்போம்.

சடைமுடி

சிவபெருமானுக்கு இருப்பது போலவே விநாயகருக்கும் சடைமுடி உண்டு. அந்தச் சடை அந்திநிறம் அல்லது பவளநிறச் சடையாக உள்ளது. நீண்ட சடையாகவும், கற்றைச் சடையாகவும், மின்னலைப் போல ஒளிவீசும் செஞ்சடையாகவும் உள்ளது.

அச்சடையில் சிவபெருமானைப் போலவே வெள்ளை மதியை அணிந்துள்ளார் விநாயகர். அதனால் அம்புலி மவுலியான், பாலசந்திரன், சோமகலாதரன், பிறைசேர்முடியான் முதலிய பெயர்களைப் பெற்றுள்ளார். கங்கையாகிய நதியையும் சடையில் அணிந்

துள்ளார். அதனுல் வெள்ளவேணிப் பெருந்தகை என்றும், பிறைமதி சூடிய பெருமான் என்றும் அழைக்கப்படுகிருர். தந்தையைப் போலவே பாம்பினைச் சடையில் அணிந்துள்ளார்.

மேலும் சடையில் அறுகு, இதழி (கொன்றை), ஆத்தி, கடுக்கை, பகன்றை, இண்டை, வெள்ளெருக்கு, தும்பை, கரந்தை ஆகிய பூக்களின் மாலைகளைச் சூடியுள்ளார். இப்பூக்கள் எல்லாம் சிவபிரானுக்கும் உகந்தவையே.

முகம்

விநாயகர் சிவபெருமானுடைய அமிசமாகக் கருதப் படுவதால் சிவபெருமானைப் போலவே 'ஐம்முகன்' 'ஐம்முகப்பிரான்' என்று அழைக்கப்பெறுகிருர். இவருடைய முகம் யானை முகமாதலின் அத்தி முகவன், ஆம்பல்முகக்கற்பகம், ஆனை முகத்தோன், இபமா முகன், உம்பல் முகன், உவாமுகக் கணபதி, ஐந்துகர வாரணம், ஒருத்தல் முகன், கசவத்திரன், கடவாரணன், கயமாமுகன், கரிமுகக் கடவுள், கவளமா முகத்தான், களபானனன், களிற்று ஆனைமுகத்தான், கஜானனன், குஞ்சர முகன், லிகநாக முகன், கைப்போதக வாமனன், கைம்மலைக் கடவுள், கைம்முகன், சிந்துர முகத்தன், சிவக்களிறு, தந்திவதனன், தும்பிக்கைப் பிள்ளை, தும்பிமுகக் கணபதி, தோல் முகன், நாகமுகவன், நால்வாயன், புகர் முகத்தவன், புழைக்கை மாமுகன், மதமாமுகக் கடவுள், மாதங்க மாகைப் புங்கவன், மாமுகன், யானை முகத்தன், வரிநுதற் களிறு, வழுவை

முகவர், வாரண மாமுகன் வாரண வதனத் தேவு, வேழப்புத்தேள், வேழமாமுகன் முதலிய எண்ணிலாப் பெயர்கள் இவருக்கு வழங்குகின்றன.

விநாயகரின் வேழமுகத்தில் கருணையென்னும் மதம்வழிந்து கொண்டிருக்கிறது.

தந்தம்

விநாயகர் தமது யானை முகத்திலுள்ள இரண்டு தந்தங்களுள் ஒன்றைப் பாரதக் கதையை மேருவில் எழுதுவதற்காக ஒடித்துவிட்டதால் 'ஒற்றைக் கொம்பன்' என்று அழைக்கப்படுகிறார். அந்த ஒடிந்த கொம்பை ஒரு கரத்தில் ஏந்தியுள்ளார்.

மற்றொரு கொம்பில் 'கிம்புரி' என்ற அணி உள்ளது. அக்கொம்பு சந்திரனைப் போல வெண்மை யாயும் ஒளிபடைத்ததாயும் விளங்குவதால் 'திங்கள் வெண்கோடு' என்றும், 'பிறைமருப்பு' என்றும் பேசப்படுகிறது. ஒடியாத ஒரு தந்தத்தைப் பெற்றிருப் பதால் ஒற்றைக் கொம்பன், ஒற்றைவார் மருப்பினன், ஒரு தந்தன், ஒருகோட்டுப் பெருமான், ஏகதந்தன் என்றெல்லாம் அழைக்கப்பெறுகிறார்.

நுதல்

சிவபெருமானுக்கு இருப்பது போலவே விநாய கரின் நுதலிலும் ஒரு கண் உள்ளது. அதனால் முக்கண்ணன் என்ற பெயரினை இவரும் பெற்றுள்ளார். விநாயகரின் நீண்ட நெற்றி திருநீற்றுப் பொலிவுடன் விளங்குகிறது.

கண்கள்

சிவபிரானின் கண்களைப் போலவே விநாயகரின் மூன்று கண்களும் ஞாயிறு, திங்கள், தீ என்பனவாக உள்ளன. அதனுல் 'விழித்திரி அற்புத வித்தகர்' என்று பருஊப்பள்ளு இவரைப் பாராட்டுகிறது. நெற்றிக் கண்ணன் என்ற பெயர் இவருக்கும் ஏற்பட்டுள்ளது.

யானை முகத்துக்கு ஏற்ப இவருடைய கண்கள் சிறிய கண்களாக உள்ளன. அக்கண்கள் சிறிது சிவந்த நிறத்துடன் காணப்படுகின்றன.

காது

யானை முகமாதலின் இவர் காது முறத்தைப் போல உள்ளது. 'வீசிய பெருஞ் செவி' என்றும், 'சாமரம் போன்ற காது' என்றும், 'தாழ் செவி' என்றும் இவருடைய காது வருணிக்கப் படுகிறது. கண் சிறியதாயினும் காது அகன்றிருப்பதால் 'அகல் செவிச் சிறுகட் குஞ்சரக்கன்று' என்று தேவாங்க புராணம் இவரை அழைக்கிறது. இவருடைய காதுகளில் குண்டலங்கள் இலங்குகின்றன.

மூக்கு

விநாயகரின் மூக்கு துதிக்கையே; எனவே நீண்டமூக்காகும்.

தோள்

விநாயகருக்கு நான்குதோள்கள் உள்ளன என்று விநாயக புராணமும் (66—8), சிவபெருமானைப் போல்

எட்டுத் தோள்கள் உள்ளன என்று பதினொன்ருந் திருமுறையும் (28—16) கூறுகின்றன. தந்தையைப் போலவே தோள்களில் பாம்புகளை யணிந்துள்ளார் விநாயகர்.

மார்பு

சிவபிரான் மார்பைப் போலவே விநாயகரின் மார்பும் திருநீறு பூசியதாகக் காணப்படுகிறது. விநாயகரின் மார்பிலும் முப்புரிநூல் துலங்குகின்றது. மேலும் விநாயகரின் மார்பில் மணி அல்லது மதாணி (பொற் பதக்கம்) அணியப்பட்டுள்ளது. அப்பதக்கம் பாம்புகளின் மணிமுடியே என்று கொடியிடையம்மை பிள்ளைத் தமிழ் (3) கூறுகிறது.

தந்தையைப் போலவே மார்பில் பாம்புகளை அணிவதில் விருப்பங் கொண்டுள்ளார் விநாயகர். அதனுல் 'பன்னகாபரணன்' என்ற பெயர் இவருக்கு ஏற்பட்டுள்ளது. மார்பில்மட்டுமன்றி இடுப்பிலும், வயிற்றிலுங் கூடப் பாம்புகளைக் கட்டியுள்ளார். இடுப்பிலும் வயிற்றிலும் பாம்பு கச்சையாகப் பயன்படுகிறது.

கைகள்

விநாயகருக்கு நான்கு கைகள் உள்ளன. யானைமுகத்தோடு நீட்டிக் கொண்டிருக்கும் துதிக்கையுடன் அவருக்கு மொத்தம் ஐந்து கைகள் இருப்பதால் ஐங்கரன் என்னும் பெயரைப் பெற்றுள்ளார். ஐந்து கரங்களிலும் எழுத்தாணி (கொம்பு) கலசம், பாசம், அங்குசம், கனி இவை உள்ளன.

துதிக்கை தொங்கிக் கொண்டிருப்ப தொன்று தலின் அது நாலுகை (நாலுதல்—தொங்குதல்) என்று அழைக்கப்படும். 'நாலு கை' என்பதற்கு நான்கு கைகள் என்ற பொருளும் உண்டு. அப் பொருளைப் பயன் படுத்தி நான்கு, ஐந்து என்ற எண்கள் முறையே வருவதாக அமைத்து 'நாலுகர ஐந்துகர ஆனைமுகர், என்ற தொடர் விநாயகரைக் குறிப்பதாக நால்வர் பிள்ளைத் தமிழில் காணப்படுவது நயம் பொருந்தியதாக உள்ளது. துதிக்கைக்கு (நாலு கரம் என்று கூறுவது போல்) நால்வாய் (தொங்கும் வாய்) என்ற பெயரும் உண்டு. நால் (நான்கு) என்ற எண்ணுடன் ஐந்து என்ற எண்ணும்வர அமைத்து 'நால்வாய் ஐங்கரக் கற்பகம்' என்று விநாயகரைத் தில்லைப் பதிற்றுப்பத்தந்தாதி குறிப்பிடுவதும் நயம் பொருந்தியதாகும்.

விநாயகர் ஐந்து கைகள் பெற்றிருப்பதால், அத்தம் ஓர் ஐந்து கொண்ட அருள்நாதன், ஐங்கரன், ஐங்கையன், பஞ்சகரன், ஐங்கரநாதன், ஐங்கரக் கடவுள், ஐந்துகரப்பிள்ளை, ஐங்கரச் சிந்துரம், ஐங்கரப் பிரான், ஐந்து கையன், ஐங்கரப் புத்தேள், ஐங்கரக் களிறு, ஐந்து கரத்தன், ஐங்கைக் கடவுள், ஐங்கைப் பண்ணவன் முதலிய பெயர்கள் விநாயகரைக் குறித்து வழங்குகின்றன. துதிக்கையைச் சிறப்பாகக் குறிப் பிட்டுப் பனைஎழிற்கைப் பரமன், தாழ்தடக்கையான், துதிக்கைமாதங்கம், துதிக்கரம் உடைய மாமணி, துதிக்கைப்பரன், ஒரு கைக் கற்பகம், புழைநெடுந் தடக்கை நால்வாய்ப் பொருப்பு, துதியூருங் கரத்தன் முதலிய பெயர்கள் அவருக்கு ஏற்பட்டுள்ளன. அங்குசத்

தையும் பாசத்தையும் இருகைகளில் ஏந்தியிருப்பதால் அங்குசபாசகரப் பிரசித்தன், பாசாங்குச தரன், அங்குச பாசம் உவந்து அணி நால்வாய் அற்புதக் கற்பகம், அங்குச பாசன் முதலிய பெயர்கள் அவருக்கு வழங்குகின்றன.

விநாயகருக்குப் பத்துக் கைகள் இருப்பதாக விநாயகபுராணம் குறிப்பிட்டதற் கேற்பத் தட்சிண கைலாச புராணம், அப்பத்துக் கைகளிலும் செந்தாமரை, கதை, சக்கரம், தந்தம், சிலை (வில்), பாம்பு, பொற்குடம், கழுநீர், மழு, மாதுளங்கனி ஆகிய பத்துப் பொருள்கள் இருப்பதாகக் கூறுகின்றது. ஆனால் விநாயக புராணம் 14-ஆம் பிரிவின் 15-ஆம் பாடல் விநாயகரின் நான்கு கரங்களுள் ஒன்றில் மழுப்படையும், இன்னொன்றில் கமண்டலமும் உள்ளன என்றும், மற்ற இரு கரங்கள் அபய வரதம் காட்டுவதாக அமைந்துள்ளன என்றும் கூறுகிறது. விநாயகர் ஒரு கையில் சங்கினை ஏந்தியிருப்பதாகப் பருளை விநாயகர் பள்ளு சில இடங்களில் குறிப்பிடுகிறது (42, 106-ஆம் பாடல்கள்). தட்சிண கைலாச புராணக் கடவுள் வாழ்த்துப் பாடலும், 'பருளை விநாயகர் பள்ளின்' 46-ஆம்பாடலும் விநாயகர் ஒரு கையில் தாமரைமலரை ஏந்தியிருக்கிறார் என்று கூறுகின்றன.

வயிறு

விநோத உருவினரான விநாயகருக்குப் பானை போன்று பெருத்த வயிறு வாய்ந்துள்ளது. அதனால் திருப்புகழ் இவருக்குத் தொப்பையப்பன், தொந்திக் கணபதி, தொந்தித் தந்திப்பரன், மத்தள வயிறன்,

மகோதரன் போன்ற பெயர்களைச் சூட்டியுள்ளது. தொந்திவயிற்று ஐந்துகரப் பரனுக்குக் கடோதரன், லம்போதரன், பேழை வயிற்றன், பெருவயிற்றுப் பிள்ளை, குடவயிறுடையவர், காழிவயிற்று ஒரு வேழ முகத்தவன் என்ற வேறு பெயர்களும் ஏற்பட்டுள்ளன. அடியார்களுக்கு ஆனைமுகத்தோனின் பானைவயிறு அழகுற்றதாகவே தோன்றுகிறது. வயிற்றில் விநாயகர் பாம்பை அணிந்துள்ளார். வயிற்றில் சூரியனை யணிந்திருப்பதாக மயிலத்தந்தாதியும், ஆதிசேடனை இறுக்கிக் கட்டியிருப்பதாக விநாயகபுராணமும்(51-27) கூறுகின்றன.

இடை

இடையில் விநாயகர் பட்டாடையுடுத்திருப்பதாக மருதாசலப் பிள்ளைத் தமிழ் கூறுகிறது. தந்தையைப் போன்றே இவரும் கச்சையினையும், புலித்தோலையும் அணிந்துள்ளார்.

திருவடி

விநாயகரின் கால்கள் குறுகியனவாய் உள்ளன. அக்கால்களில் வீரதண்டை, கிண்கிணி, பாதசாலம், நூபுரம், சதங்கை முதலியவற்றை விநாயகர் அணிந்துள்ளார்.

இருக்கை

பிரமதேவனைப் போலவே விநாயகரும் கமலாசனத்தில் வீற்றிருக்கின்றார். 'கமலாசனத்துக் கற்பகம்' என்று விநாயகர் நான் மணிமாலை (3) குறிப்பிடுகிறது.

5. எண்ணலங்காரம்

விநாயகரை வருணிக்கும் தொடர்களில் ஒன்று முதல் ஏழுவரையிலுள்ள எண்கள் அழகுபடத் தொடர்து வருவது படித்து இன்புறத் தக்கது. 'ஒரு வகை வடிவினில் இருவகைத்தாகிய மும்மதன்' திருப்புகழ் (1305) குறிப்பிடுகிறது. விநாயகரின் வடிவம் ஒன்று போலக் காணப்படினும் மழகளிறு, முதுகளிறு என இருவகையான வடிவம் உள்ளன என்றும், கன்ன மதம், கபோலமதம், பீசமதம் என்ற மூவகை மதங்கள் (நீரொழுக்கு) யானையினிடத்துத் தோன்றுவதால் விநாயகரிடத்தும் (கருணை நீரொழுக்காகிய) மூன்று மதங்களும் உள்ளன என்றும் இத்தொடர் குறிப்பிடுகிறது.

'ஒரு மருப்பு இரண்டு காது முக்கண்ணும் நான்கு தோளும் உடையவன்' என்று விநாயக புராணம் (18—32) குறிப்பிடுகிறது.

'வாங்கும் ஒரு கோட்டு இருசெவி மும்மத நால்வாய் ஐங்கரத் தலங்கள் தாங்கு சோதிக் குணப் பெருங் குஞ்சரக்கன்று' என்று மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் (பிரபந்தத் திரட்டு 2544) ஒன்று முதல் ஐந்து வரையுள்ள எண்களை அமைத்துப் பாடியுள்ளார். ''ஒரு கோட்டன் இரு செவியன் மும்மதத்தன் நால்வாய் ஐங்கரத்தன்'' என்று சிவஞான சித்தியாரின் காப்புச் செய்யுளும் அவ்வாறே அமைத்துக் கூறுகிறது.

பல துறைக் காரிகை என்ற நூல் ஒன்று முதல் ஆறு எண்கள் வருமாறு விநாயகரைப் பின் வருமாறு

வருணிக்கிறது. 'ஒரு கொம்பு இருசெவி மும்மத நால் வாய் உறும் ஐங்கரப் பெருகு ஆறு, இளம்பிறை, கொன்றையும் தும்பையும் பேணும் அரன்தரு காதலன்'' (ஆறு—கங்கைநதி.)

கல்வளை அந்தாதி என்னும் நூல் வேறு வகையாக ஒன்று முதல் ஆறு எண்கள் விநாயகருக்குப் பொருந்துமாறு கூறுகிறது. 'ஒன்ருய் இருசுடர் முத்தொழில் நான்மறை ஓதும் ஐந்தாய், நன்ருய ஆறங்கம் யாவுக்கும் காரண நாதனுமாய் நின்ருன்' என்று கூறுகிறது. விநாயகரின் ஒரு வடிவத்தில் சூரிய சந்திரர்களாகிய இரண்டு சுடர்கள் கண்களாக அமைந்துள்ளன; ஆக்கல், அளித்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களையும் விநாயகர் இயற்றுகின்ருர்; நான் மறைகளுக்கும், ஐந்தாம் மறையாகிய பாரதத்திற்கும், ஆறங்கங்களுக்கும் காரணநாதனுய் நிற்கிருர் என்று கல்வளையந்தாதி கூறுகிறது.

விநாயகர் பதிற்றுப்பத்தந்தாதி என்ற நூல்(10ஆம் பாடல்) ஒன்று முதல் ஏழுவரையுள்ள எண்கள் தோன்றுமாறு 'ஒரு கொம்பு இருதாள் மூவிழியும் ஒளிர் நால்வாயும் ஐங்கரமும் பெருகு ஆறு எனவே ஏழு மதமும் பெற்ருன்' என்று வருணிக்கிறது. விநாயகரின் யானை முகத்தில் ஆறு போல மதம் எழுகிறது என்பது, இவ்வரியின் கடைசிப் பகுதிக்குப் பொருளாகும்.

தவத்துறைப் புராணம் ''ஐங்கரமும் அறு கொம்பும் (ஒடிந்த கொம்பும்), எழு கொம்பும் (ஒடியாமல்

தழைக்கின்ற கொம்பும்) தாங்கும் சைவ விநாயகன்'' என்றும், குமரேசர் பிள்ளைத் தமிழ் ''அஞ்சுகரம் ஆறு சிரம் (ஆறுகிய கங்கை அணிந்த சிரம்), எழு மணித் தோள்) (எழுகின்ற அழகிய மணித்தோள்) படைத்த வேழம்'' என்றும் ஐந்து, ஆறு, ஏழு என்ற எண்களை வெவ்வேறு வகையில் பொருள் தருமாறு அமைத்த திறம் எண்ணி இன்புறத் தக்கது.

6. விநாயகரின் உணவு

அண்டங்களை யெல்லாம் அகத்தேயடக்கிய அகட்டினையுடைய பண்டிப் பெருமானாகிய தொப்பையப்பன் போசனப் பிரியனாக விளங்குகின்றார். அடியார்கள் அகமகிழ்ந்து அளிக்கும் பொருள் எதுவாயினும் அன்புடன் அதனை ஏற்றுக்கொள்ளுந் தகைமை படைத்தவர். எனினும் அப்பெருமானுக்கு மிக்க உவப்பைத் தரும் உணவுப் பொருள்கள் சிலவற்றை அடியார்கள் குறித்துள்ளனர்.

அப்பம், அவல், கடலை, பொரி, கரும்பு, வெல்லம், அமுது, வெண்சர்க்கரை, பால், தேன், இளநீர், எள், பயறு, முப்பழம், பனங்கிழங்கு இவற்றைத் தம் பொன் தொப்பையில் அடைக்கின்றவராக அருணகிரியார்க்கு விநாயகர் காட்சியளிக்கிறார்.

மோதகம் விநாயகருக்கு மிகவும் விருப்பமான தின்பண்டம். அதை எப்போதும் தம் துதிக்கையிலே ஏந்திக் கொண்டிருக்கிறார்; அதனால் மோதகப்ரியன் என்ற பெயரைப் பெற்றுள்ளார். முக்கனிகளையும் மிக்க விருப்புடன் உண்ணுவார். முக்கனிகளில் மாங்க

னியிடத்தே அவருக்கு ஆசை அதிகம். அக்கனிக்காக வன்றோ அவர் அழகுமிகு இளவல் கோபம் கொள்ளவும் நேரும் என மதியாது தந்தையை வலம் வந்து அதைப் பெற்று மகிழ்ந்தார்!

எள், மோதகம், இனிய கனிவகைகள் முதலியவற்றை அவ்வையார் விநாயகருக்குத் தினமும் படைத்து வழிபட்டு வந்தார்.

பாற் சோற்றிலும், வெண் பொங்கலிலும், பணிகாரத்தொடு வடையிலும் அவர் பற்று மிக்கவர். வெள்ளரிக்காய், வெள்ளரிப்பழம், விளாம்பழம், நாவற்பழம், முதலியவற்றையும் விருப்புடன் உண்பார்.

ஆவணி மாதம் விநாயகர் சதுர்த்தியன்று அன்பர்கள் படைக்கும் அடை, எள்ளுருண்டை, மொச்சை, கடலைக்காயுருண்டை, கற்கண்டு, வள்ளிக்கிழங்கு, உண்கட்டி, பாகு, சீனி, பழம், தினைமாவு, கரும்பு, தயிர், பசும்பால், வடை, பாயசம், அதிரசம், புளியோதரை, கடுகோரை, பலாக்கனி, மாதுளங்கனி, தேங்காய், வெல்லம், தோசை, லட்டு, பிட்டு, பால், வெண்ணெய் முதலியவற்றை யெல்லாம் ஆசையுடன் எடுத்து வயிற்றினிலடக்கிப் பெருவயிறுடையவராகக் காட்சி தருகிறுர். பலவகையான உணவுகளையும் தினந் தோறும் ஆரா விருப்புடன் வயிற்றில் துறுத்திக் கொள்வதால் மகோதரன் (பெருவயிறன்) என்ற பெயரையும் பெற்றுள்ளார். அவருடைய விகட உருவத்தைக் கண்டு பிறர் எள்ளி நகை யாடினுலும் அதற்காக அவர்களைச் சினந்து கொள்ளாத பேரருட் குணத்தையும் படைத்துள்ளார்.

நாம் உண்ணும் பொருள்கள் பலவற்றையும் நம்முள் உறைந்து நிற்கும் உத்தமனுக்கே படைக்க வேண்டும். நாச்சுவைக்காகவும் வயிற்றுப் பெருமானுக்காகவும் நாம் உண்ணும் போதெல்லாம் நமக்கு எல்லாவகை இன்பங்களையும் கொடுத்துதவும் பெருமானை நினைத்துக்கொள்ள வேண்டும் என்ற நற்பழக்கம் நம்மிடையே ஏற்பட வேண்டும் என்பதற்காகவே விநாயகர் நாம் விரும்பி யுண்ணும் பலவகையான உணவு வகைகளை யெல்லாம் தாமும் விரும்புகின்றார் போலும்!

7. விநாயகரின் ஊர்தி

விநாயகரின் வாகனம் பெருச்சாளியாகும். மூடிகம் (மூஷிகம்). ஆகு, உந்துரு, மூஞ்சூறு, களகம் ஆகிய சொற்கள் பெருச்சாளியையே குறிக்கின்றன.

விசித்திரமான திருவுருவையுடைய விநாயகருக்கு அமைந்த வாகனமும் வியப்புக் குரியதாகவே உள்ளது. யானையை எலி சுமந்து செல்லுங் காட்சி புறக்கண்ணிற்குப் பொருந்தாக் காட்சியாகக் கூடத் தோன்றலாம். ஆனால் விநாயகரின் ஊர்தி திறல் மிக்கதாம்; பெரும் பாரம் சுமந்தாலும் மிக விரைந்து செல்லக்கூடிய இயல்புடையதாம்; பதினாலு உலகங்களையும் பெயர்த்திடும் வல்லமை வாய்ந்ததாம். ‘திடமுலவும் மூசிகம் நடவும் ஞான தேசிகனாய்’ விநாயகர் விளங்குகின்றார்.

இல்லறம் நடாத்தும் இல்லங்களில் உள்ளோர்க்கு எல்லையில்லாத் தொல்லைதரும் எலிகளைப் பார்த்திருக்

கிறோம். முற்காலத்திலும் மூஞ்சூறு வடிவத்தில் ஒரு முரடன் - ஓரசுரன் இல்லறம் நடாத்துவோர்க்குப் பெருந்தொல்லைகளை விளைத்துக் கொண்டிருந்தானும். அந்த முரடனைக் குமைத்துத் தமது வாகனமாக்கி வாகை புனைந்தார் விநாயகர். முருகப் பெருமானும் அசுரனை யடக்கி மயிலூர்தியையும், சேவற் கொடியை யும் பெற்ருர் என்று புராணம் புகல்கின்றதன்றோ ?

அசுரர்களை அழித்து ஒழித்து விடாமல் அவர்களை வாகனமாக்கிக் கொள்ளுவதில் உள்ள கருத்து என்ன என்பது உன்னுதற் குரியது. நம்முடைய உள்ளத்தில் எழும் ஆசைகளே அசுரவடிவங்களை மேற்கொள்கின் றன. ஆசைகள் எழும் மனத்தின் பகுதி சக்தி மனம் (Vital mind) என்று அழைக்கப்படும். ஆசை யுணர்ச்சிகளுக்கு அளவிலாச் சக்தியைச் சக்தி மனம் தந்து விடுகிறது. சில ஆசைகள்—புராணங்களில் கூறப்பெறும் அரக்கர்களைப் போலப்—பல தலைகளை, பல்வேறு நோக்கங்களைப் பெற்றுத் தலை விரித்தாடு கின்றன. ஆசைகளுக்குத் தன் சக்திகளை யெல்லாம் கொடுத்துவிட்ட மனிதன் அவை ஆடும் பேயாட்டத் தைப் பார்த்துச் செய்வதறியாது திகைக்கின்ருன். வளர்த்த கடா மார்பில் பாய்வது போல மனிதனின் சக்தி மனத்திலிருந்து தோன்றிய ஆசைகள் மனி தனையே அழிக்கத் தொடங்குகின்றன. அப்போது தான் மனிதன் இனித் தன் செயலால் ஆவதொன்று மில்லை என்றறிந்து ஆண்டவனை நோக்கி அலறு கின்ருன். ஆண்டவனே அசுர சக்திகளை அடக்க வல்லவன். அந்த அசுர சக்திகளை அழிப்பதைக் காட்டிலும் அவற்றை அடக்கி அவற்றின் முரட்டுத்

தன்மைகளை ஒடுக்கி நல்வழிப் படுத்தினுல், சக்தி மிக்க அந்த உணர்ச்சிகளை ஆக்க வேலைகளின் பக்கம் திருப்பிச் சிறந்த பயன்களைப் பெறலாம். அழிக்கும் அணுகுண்டுச் சக்திகளை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்தினுல் அளவிலாப் பயன்களை அடையலா மன்ருே? அது போலவே ஆசையுணர்ச்சிகளைப் பொதுநல உணர்ச்சிகளாக மாற்றினுல்—உயர்ந்த குறிக்கோள்களை அடைவதற்கு உதவும். ஆர்வ உணர்ச்சிகளாக மாற்றினுல் மனிதன் பெரும் பயனையடைய முடியும்.

ஒருபொருளை அடைய வேண்டும் என்ற ஆசையுணர்ச்சி எல்லோர்க்குமே உண்டு. ஆனுல் அந்த ஆசையுணர்ச்சியை அழியும் இயல்புடைய, நிலையாத இவ்வுலகப் பொருள்களை அடைவதற்காகச் செலுத்துவதைவிட உலகத்திலேயே என்றும் நிலைத்த, உண்மையான பரம்பொருளை—பிறவித் துன்பங்களைப் போக்க வேண்டுமாயின் நாம் சென்றடைந்தேயாக வேண்டிய பரம்பொருளையே அடைய வேண்டும் என்ற ஆசையுணர்ச்சியாக மாற்றுவதால் பக்தியும் ஞானமும் வளர்ந்தோங்கும். அவை நம்மை ஆண்டவனின் அருகில் அழைத்துச் செல்லும். அதற்கு மாருக உணர்ச்சிகளை யெல்லாம் அழித்துவிட்டு வெறும் மரக்கட்டைகளாக வாழ்வதால் வாழ்க்கையின் இன்பம் ஏது? பயன் ஏது? சத்துவ குணம் மிக்கமனமே அல்லது தெய்வத்திருவருள் பெற்றமனமே அசுரசக்திகளை யெல்லாம் ஆக்கவழியில் திருப்பும் அறிவைப் பெற்றிருக்கும். தன்னடக்கமும் தன்னுட்சியும் (Self-control & self-mastery) கைவரப் பெற்றவர்களே சக்தியுணர்ச்சிகளை (vital feelings) நல்வழியில் செலுத்தி

நற்பயன் பெறும் திறன் படைத்தவர்களாவர். அசுர சக்திகளை அடக்கி யொடுக்கித் தன்னுட்சிக்கீழ் வைத்திருப்பதே வெற்றிவாழ்க்கையாகும் என்பதை உணர்த்தவே நம்நாட்டுத் தெய்வங்கள் அசுரர்களை அடக்கி அவர்களை வாகனமாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

சிவபிரான், திருமால், நான்முகன் முதலிய தெய்வங்களுக்கு அவர்களுடைய ஊர்திகளே அவர்களுக்குரிய கொடிகளின் சின்னங்களாயிருப்பது போலவே ஆதிப்பிரானை விநாயகரின் கொடியும் பெருச்சாளியுருவம் பொறித்த கொடியாகவே உள்ளது. அதனுல்தான் விநாயகருக்கு ஆகு கேதனன் (பெருச்சாளிக் கொடியை உடையவன்) என்ற பெயர் ஏற்பட்டது.

தேவிக்குரிய ஊர்தியான சிங்கம் விநாயகருக்கும் உரியதென்ற கருத்திஞல் விநாயகருக்குச் 'சிங்க வாகனன்' என்ற பெயருமுள்ளதாக விநாயக புராணம் (69-4) கூறுகிறது.

8. விநாயகரின் தத்துவம்

திருவுருவம்

விநாயகர் 'ஞானச் சிகரம்மீது உறையுஞ் சோதி' யாகத் திகழ்கிருர். விநாயகரின் வடிவம் முழுதும் ஞானசொரூபமே. ஞானமயமானவரா யிருப்பதால் திருமந்திரம் இவரை 'ஞானக்கொழுந்து' என்று குறிப்பிடுகிறது. பார்ப்பதற்கு விநோதமான உருவமா யிருப்பினும், இவருடைய வடிவு சின்மயானந்தவடிவே.

மந்திரங்களுக் கெல்லாம் வேதங்களுக்கெல்லாம் மூல மாயிருக்கும் பிரணவம் எனப்படும் ஓங்கார மந்திரத்தின் வடிவாகவே விநாயகரின் திருவுருவம் அமைந்துள்ளது. 'ஓம்' எனும் மந்திரத்தின் பொருளையெல்லாம் முழுமையுற விரித்துச் சொல்லுதல் என்பது எளிதன்று.

அந்த மூலமந்திரத்தின் பொருளுக்கு ஒரு வரிவடிவமாக (யாவரும் காண்பதற் குரிய வடிவமாக) விளங்குவதே விநாயகரின் திருவுருவமாகும். அதனுல் தான் ஓங்கார வடிவன், ஓம் பொருளாளன், ஓங்காரன், ஓங்காரக் கயமுனி, பிரணவச் சோதி, பிரணவ சொரூபன் முதலிய பெயர்கள் விநாயகரைக் குறித்து வழங்குகின்றன. மூலப்பரஞ்சுடராகிய விநாயகரைத் 'தாரகப்பிரம்மம்' என்றே கந்தபுராணம் குறிப்பிடு கிறது. பல்வேறு மந்திரங்களைக் கொண்டிருக்கும் நான்கு வேதங்களின் உச்சியில் உள்ள மந்திர மாயிருப்பது தாரகமந்திரமாகிய-பிரணவ மந்திரமே, இராமலிங்க அடிகளாரும் 'பெரும்பொருட்கு இடனும் பிரணவ வடிவில் பிறங்கிய ஒரு தனிப் பேறே' என்று விநாயகரை விளிக்கின்ருர்.

கருணை மதநீர்

யானையின் காதுகளிலிருந்தும், கன்னங்களி லிருந்தும் மதநீர் வழியும் என்று கூறுவர். யானை யுருவம் படைத்த விநாயகரின் முகத்தில் ஒழுகும் மதம் 'மெய்ஞ்ஞானம்' என்ற மதமே. 'கருணை யென்னும் வெள்ளமதம்' பொழிவதாகத் திருவிளை யாடற்புராணம் கூறும். விநாயகர் ஞானமதமாகிய வெள்ளத்தால் அன்பர்களின் அறியாமையாகிய மனக்

கறையைக் கழுவி வெள்ளத் தந்தத்தால் வெளிற்ற றிவைப் போக்கி அன்பர்கள் பிறவிச் சேற்றில் அழுந்தாமே துதிக்கையில் எடுத்துக் காப்பாற்றி நற்கதியில் சேர்ப்பார்.

நம்பிக்கையூட்டும் தும்பிக்கை

செவ்வந்திப் புராணம் என்றநூல் விநாயகர் தம் துதிக்கையால் 'அருள் என்னுங் கடல் முகந்து அடியார்களின் மனமாகிய நிலத்தில் சிவபோகப்பயிர் விளைய வரமழை பொழிகிருர்' என்று கூறும்.

மூவுலகும் 'துதிக்கை' யினுல் (தொழுவதனுல்) விநாயகரின் தும்பிக்கைக்குத் 'துதிக்கை' என்ற பெயர் பொருந்துவதாகும் என்று பருளைவிநாயகர் பள்ளு (42-13) குறிப்பிடுகிறது.

தந்தமும் பாசமும்

பகைவரைக் குத்தித் தொலைப்பதற்காக விநாயகர் ஒரு தந்தத்தை ஏந்திநிற்கிருர் என்று காஞ்சிப் புராணம் கூறுகிறது (10—47).

தம்மைக் கட்டு (ப்படுத்து) பவர் யாரும் இல்லை என்பதற்கடையாளமாக விநாயகர் ஒரு கையில் பாசம் (கயிறு) ஏந்தியிருக்கிருர் என்று செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் கூறுகிறது.

தொந்திவயிறு

விநாயகர் அண்டபிண்ட சராசரம் அனைத்தையும் தம் வயிற்றில் அடக்கிவைத்திருப்பதால் அந்த வயிறு தொந்திவயிருகக் காட்சியளிக்கிறது.

ஐந்து கரங்கள்

விநாயகரின் முகம் ஓங்கார வடிவத்தைக் காட்டு கிறது என்றும் அவர் திருவைந்தெழுத்துக் குரியவர் என்பதை அவருடைய ஐந்து கரங்களும் காட்டுகின்றன என்றும், நீங்காத அருள் மும்மதமாக ஒழுகுகிறது என்றும் 'மாணிக்கவாசகர் விலாசம்' என்றநூல் கூறுகிறது.

உருவகங்கள்

ஞான மாமதயானை மாமாயைத் தொடரின் அறுத்துப் பசுஞானம் என்னும் கவளத்தை உண்டு, மதங் கொண்டு, காமக் குரோதம் முதலிய கட்டுத் தறிகளைப் பிடுங்கிக் கொண்டு சென்று அடியார்களின் வினைக்கடலை உழக்குகின்றது என்று குளத்தூர்ப் பதிற்றுப்பத் தந்தாதி கூறுகிறது. அந்த யானை ஆணவம், கன்மம், மாயை என்னும் பெருங்காட்டினை அழிப்பதாகப் பர்வதவர்த்தனி பிள்ளைத்தமிழ் செப்பு கிறது.

ஞானயானையைப் பிடிக்கும் வழி

ஞான ஐங்கரத்தோன் நம் உள்ளத்தில் நிலையாக நிற்பதற்குத் திருவிளையாடல் புராணம் வழி கூறுகிறது. நம் உள்ளமாகிய கூடத்தில் ஊக்கம் என்னுங் கட்டுத்தறியை நிறுவி, அன்பென்னும் சங்கிலியால் பிணைத்துக் கட்டித், தீவினைகளைப் போக்குதற்குரிய ஆத்மஞானம் என்னும் கவளமிட அதைக் களிப்புடன் உண்டு கருணையென்னும் வெள்ளமதம் பொழிந்து விளையாடும் அந்த ஞானமாமதயானை.

எல்லாமானவர்

விநாயகரின் திருவுருவில் ஒருபக்கம் கொம்பு இருப்பதால் ஆண்வடிவு என்றும், மற்ெருரு பக்கம் அஃதில்லாதிருப்பதால் பெண்வடிவு என்றும், யானை முகம் பெற்றிருப்பதால் அஃறிணை யென்றும், மனிதர்களைப் போல வயிறு, கால்கள் முதலியன பெற்றிருப்பதால் உயர்திணை யென்றும் கூறுவதற்கு இடந்தருவதால் விநாயகர் ஆணுமல்லர், பெண்ணுமல்லர், உயர்திணையுமல்லர், அஃறிணையுமல்லர், எல்லாமானவர் என்ற கருத்துப் புலப்படும்.

கூத்தாடுபவர்

விநாயகர் நாதாந்த முடிவில் மெய்ஞ்ஞான நாடகம் ஆடுவதாகக் கணேசமாலையும், பஞ்சாட்சரத்தில் அல்லது ஐம்பத்தோரட்சரத்தில் ஆடுவதாக நாலுமந்திரி விலாசமும் கூறுகின்றன.

9. விநாயகரின் பெருமை

முழுமுதற்கடவுள்

எழுத்துக்களில் எல்லாம் அகரம் கலந்திருப்பது போலவும், சொல்லில் பொருள் கலந்திருப்பது போலவும் விநாயகர் எல்லா உயிர்களிலும் நிறைந்திருக்கின்ருர். ஆதியும் அனுதியுமாக இருக்கிருர். வேதங்கள் எல்லாம் அவருடைய குணங் குறிகளை அளந்தறிய முடியாது அலமருகின்றன. விநாயகர் தூய்மையான நித்தியப் பொருளாய்ப், பரஞ்சுடராய்ப்,

பராபரமாய் விளங்குகின்றார். 'நித்தியமாய் நின் மலமாய் நிர்க்குணமாய் நீடொளியாய்த், தத்துவமாய்த் தத்துவத்துக் கப்பாலாய் அப்பாலும், அத்துவிதமான அரும்பொருளாக' விளங்குகிறார். மனம் வாக்குக்காயங் களுக்கு எட்டாதவராய் உள்ளார். ஆதி அந்தம் நடுவின்றி அகண்டாகாரமாய் ஒன்றும் சோதியாகத் துலங்குகிறார்; ஆதி நடு முடிவினை யாரும் அறிய முடியாதவராய்த், தத்துவ அறிவுக்கும் எட்டாத் தயங்குபேரறிவாய் விளங்குகிறார். உலகிலுள்ள காரணங்களுக் கெல்லாம், காரியங்களுக்கெல்லாம் காரணப் பொருளாயுள்ளார். எல்லா உலகங்களுக்கும் முதற்கடவுள் இவரே. இவர் எல்லா உலகங்களையும் தம் வயிற்றிலிருந்து தோற்றுவிப்பார். உயிர்களுக் கெல்லாம் உயிராய் விளங்குகிறார். அகில லோகத் துக்கும் புகலிடமாயுள்ளார். தாயாகி எவ்வுயிர்க்குந் தானாய் நின்றே தண்ணளி செய்தருளுவார். உலகம் முழுதும் நீக்கமற எங்கும் நிறைந்திருக்கிறார். உணர்ந் தார்க்கும் உணர்வரியவராய் விளங்குகிறார். 'சொற் பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான அற்புதம் நின்ற களிறா'கத் திகழ்கிறார். 'நிருவிகற்பமாய், நிறைந்த ஆனந்த பூரணமாய், நிருவிகாரமாய், நிர்க்குணமாய், அத்துவிதமாய், நிருவிசேடமாய், நிரஞ்சனமாகி, ஒன்றாலும் நிருமிதப்படாக் கணேசனா'க விளங்குகிறார்.

மூலகாரணக் கடவுள்

எல்லா உலகங்கட்கும் ஆதாரமாய தெய்வம் விநாயகரே. முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளான அவர் மூத்தோன் என்றும்,

முன்ஞேன் என்றும், முதற்பொருள் என்றும், முதலிலா முதல்வோன் என்றும், பெரியோன் என்றும், புராதனப் பொருள் என்றும், புராண புருடோத்தமன் என்றும், ஆதிபரஞ் சோதி என்றும் அழைக்கப் பெறுகிருர். அவர் ஊழிக்காலத்திலும் அழியாத முதல்வர். எல்லாத் திசைகளிலும் பார்க்குமிடமெங்கும் தாஞய் நிறைந்த தனிப்பொருள் அவர். எல்லாக் கடவுளர்க்கும் பெரிய வராதலின் 'முதற்பெருந் தெய்வம்' என்ற சிறப்புக் குரியவர். முதல் நடுவு ஈறு இல்லாத சிவபெருமானின் உளத்தினில் ஒளிர்பவர். சிவபெருமானுக்கும் இவர் முந்தியவர் என்று திருச்செந்தூர்ப்புராணம் கூறுகிறது.

ஒரு தனி முதல்

விநாயகர் ஒப்பற்ற பெருமை உடையவர்; தன்னிக ரில்லாத சிறப்புக்களைப் பெற்றவர். தமக்குத் தாமே இணையானவர். அதனுல் 'தற்பரன்' என்றழைக்கப் பெறுகிருர்.

மந்திரப் பொருள்

ஓங்கார வடிவமான விநாயகர் மந்திர நன்மூர்த்தி யாக விளங்குகிருர். அவருடைய உருவத் திருமேனி மந்திரத்தின் வடிவமே.

மூலாதாரஞர்

நம் உடலின்கண் உள்ள ஆருதாரங்களில் மூலா தாரத்திற் குரியவர் விநாயகர். அதனுல் மூலாதாரப் பொருள் என்றழைக்கப் பெறுகிருர்.

ஞானக்குன்று

ஞானமே உருவாகிய நாயகனுதலின் விநாயகர் 'விமல மெய்ஞ்ஞானக் களிறு' என்றும், 'ஞானப் பரஞ் சுடர்' என்றும், ஞான முத்திரையன் என்றும், ஞான நாயகன் என்றும், சிவஞானமால் களிறு என்றும், மெய்ஞ்ஞானச் சுடர்க்கொழுந்து என்றும் போற்றப் படுகிறார்.

வித்தைக்கு இறைவன்

எல்லாக் கலைகளுக்கும் காரணராயும், அறிவினுக்கு அறிவாகிய அண்ணலுமான விநாயகர் எல்லோர்க்கும் நல்ல கல்விதர வல்லவராவர். அடியார்களுக்கு நல்ல ஞானத்தைத் தருவார்; அடியார்களின் மருளினைப் போக்கி யருளுவார்.

வேதவித்து

விநாயகர் வேதங்களைத் திருவாய் மலர்ந்தருளினர் என்று கற்பக விநாயகர் தோத்திரம் கழறுகிறது. விநாயகரின் பாதங்களில் உள்ள சிலம்புகளே வேத ஒலிகளை எழுப்புகின்றன. வேதகாரணன் என்று விநாயகர் நான்மணிமாலை இவரைக் குறிப்பிடுகிறது.

நான்கு வேதங்களும் பல்வேறு ஆகமங்களும் விநாயகரைப் புகழ்ந்து ஏத்திப் பரவுகின்றன. அவை யெல்லாம் விநாயகரின் பெருமைகளை எடுத்துரைக்க முடியாதபடி அகண்ட பரிபூரணராயுள்ளார். வேதச் சுடரான விநாயகர் வேத முடிவாய், அதன் உட்பொரு ளாய், வேதங்களின் முடிவில் தோயும் நற்சுடராய்

விளங்குகிருர்; சிறப்பு மிக்க வேதங்களின் முடிவில் நடம் நவிற்றுகின்ருர். 'வேதம் அளந்தும் அறிவரிய விகிர்தனுய்' விளங்குகிருர். மறை முடிவில் ஒளிரும் பிரணவப் பொருளாகத் திகழ்கிருர்.

மூவர்கள் முதல்வன்

முத்தொழிற்கும் காரணமான விநாயகரே உலகங்கள் எல்லாவற்றையும் படைக்கும்போது அயனுகவும், காக்கும்போது அரியாகவும், அழிக்கும்போது அரனுகவும் விளங்குகிருர் என்று விநாயகர் பதிற்றுப்பத் தந்தாதி (33) விளம்புகிறது. முத்தொழில்செய் மூவருக்கும் இவரே மூல புருடன் ஆவார் என்று விளத்தொட்டிப் புராணம் விளக்குகிறது. அந்த முத்தேவரும் அறியாத முதல்வன் என்று விநாயக புராணம் (63-18) விநாயகரின் பெருமையை விதந்து கூறுகிறது. 'அரி சிவன், பங்கயன் அறியா அகண்ட பரிபூரணன்' என்றும் அந்நூல் (65—5) செப்புகிறது. 'உருத்திர மூர்த்திகட்கு முத்தொழிலுஞ் செய்தருளுந் தலைமை தந்தவர் விநாயகரே' என்று வல்லபைக் கணேசர் பிரசாதமாலை செப்புகிறது.

தம்மைக் காண்பதற்காக அருந்தவஞ் செய்த மும்மூர்த்திகட்கும் ஒருநாள் ஆனைமுகத்துடன் காட்சி நல்கி முத்தொழில்களையும் முறையே இயற்றும் திறமளித்தார் என்று விநாயகர் பதிற்றுப்பத் தந்தாதி (54) கூறுகிறது. மூவர்க்கும் முத்தொழில் செய்யும் முறையை ஓதிய இவர் 'மூவர் நாயகன்' என்று போற்றப்படுகிருர். மூவர்களும் தத்தம் தொழிலை இயற்றுங்

கால் ஏற்படும் இடையூறுகளை யெல்லாம் போக்குகின்றார்.

இந்திரனும், நான்முகனும், திருமாலும், உருத்திரனும் தத்தம் தொழில் இனிது நடைபெறுவதற்கு விநாயகரை நாள்தோறும் நாள்மலர்கொண்டு அருச்சனை செய்கின்றனர் என்று நல்லூர்ப்புராணங் கூறுகிறது. 'பங்கயத்து அயனும் மாலும் பரவுறு பழையோன்' என்று கந்த புராணம் (2—27—31) கூறுகிறது.

முப்புரம் எரிப்பதற்கு உதவிய கணபதியைச் சிவபிரான் தினமும் உளமாரப் பூசிக்கின்றார் என்று விநாயகர் பதிற்றுப்பத் தந்தாதி (85) கூறும்.

அக்ர கண்ணியன்

இவ்வுலகில் உள்ளவரும், தேவருலகத்திலுள்ளவரும் இறைவழிபாடு செய்யுமுன் முதற் பூசைக்குரியவராகிய விநாயகரையே முதன்மையாகப் போற்றித் துதிப்பர்.

முருகன், திருமால், சிவபிரான், காளி, மகேசுவரி, திருமகள், கலைமகள் முதலிய பிறதெய்வங்களைத் தங்கள் வழிபடு தெய்வங்களாகக் கொண்டவர்களும் அத்தெய்வங்களை வழிபடு முன்பு மூலப்பரஞ்சுடரான விநாயகரையே வழிபடுகின்றனர். மேலும் இறைவழி-பாடேயன்றி வேறு எந்தத் தொழில்கள் செய்தாலும் எல்லோரும் முதன் முதலாக விநாயகப் பெருமானையே இறைஞ்சுகின்றனர். அப்போதுதான் எடுத்த காரியங்கள் யாவும் இடையூறின்றி இனிது முடியும் என்பது நம்பிக்கை.

தேவர்கள் பெருமான்

விநாயகர் அந்தரத்திலுள்ள அமரர்களுக்கு அருள் புரியும் கணநாதர்; தேவர்களுக்கெல்லாம் தலைவர், தேவர்களுக்குக் குருவாகவும் விளங்குகிறார். தேவர்கள் தினமும் இவரைப் போற்றி வழிபடுகின்றனர்; பிற தெய்வங்களை வணங்கு முன்பு முதன் முதலில் இவரை வழிபடுகின்றனர். இவர் வானோர் குறை தீர்க்கும் கற்பகமாக விளங்குகிறார்; அவர்கள் நினைத்த யாவும் தடையின்றி நிறைவேறச் செய்கிறார்.

கணநாதர்

விண்ணோர் அறியாத வித்தகரான விநாயகர் சிவ கணங்களுக்கும் தலைவராயிருப்பதால் கணநாதர் என்ற பெயர் இவருக்கு வழங்குகிறது.

வனப்புக்கோர் காவலன்

விநாயகர் விகடமான, விரோதமான உருவைப் பெற்றவராயினும் அழகெலாம் ஒன்றாய்த் திகழ்ந்த தோர் உருவாய் விளங்குகிறார். கோடி சூரியர்கள் ஒன்றாய்ச் சேர்ந்தால் எவ்வளவு பேரொளி உண்டா குமோ அப்படிப்பட்ட பிரகாசம் பொருந்திய செம்மேனி உடையவராய் உள்ளார்.

எழுந்தருளுமிடங்கள்

விநாயகர் காலம் மூன்றையுங் கடந்து நிற்பவர். பாச அறிவினாலும் பசு அறிவினாலும் அறிந்து கொள்வதற் கரியவர். ஆனால் மெய்யன்புடையாரின் இதயங்களில் எளிதில் மேவி வீற்றிருப்பார். தூ

அறிவினை உடையவர்தம் சிந்தையில் உலவி விளையாடு வார். முனிவர் யோகியரின் உள்ளங்களில் ஆனந்தத் தேனாகத் தித்தித்திருப்பார்; உண்ணத் தெவிட்டாச் சிவானந்த ஒளியாய்த் திகழ்வார்.

துன்பம் போக்குபவர்

விநாயகர் தத்துவமெலாங் கடந்த தத்துவ மாய்ப், பாவனைக்கும் எட்டாப் பரிபூரணராய், வரம் எலாம் தரும் வள்ளலாய் விளங்குகிறார். உலக உயிர்களுக் கெல்லாம் தனுகரண புவன போகங்களைத் தந்துதவும் தனிமுதல்வராய், உலகங்களுக்கெல்லாம் மூலவித்தாய் உள்ளார். அவர் எதையும் தம் திருவருளாலே ஈன்று புரந்து அழிக்கும் இயல் புடையவர். உயிர்களுக்கு ஏற்படுந் துக்கங்களை யெல்லாம் கணத்தில் போக்கும் பெருமை பெற்றவர். மலைபோன்று வரும் துன்பங்களை யெல்லாம் துகளாக்கி விடுவார். பிறந்து இறந்து உழலும் பிறவிப் பெருங் கடலைத் தூர்ப்பதற்கு அருள்புரிவார். முத்தி நிலைக்கு மூல வித்தாயுள்ளார். முடிவிலாத பேரன்புருவாகிய முழுமுதற் பெருமானாய், முடிவிலாத ஞான இன்ப முத்தனாய், மங்கள மூர்த்தியாய், எண்குணச் செல் வராய், நித்தமுத்த ஆதியந்த மில்லாத ஆனந்த மூர்த்தியாய், ஆனந்த வாரியாய்ப், பூரணானந்தனாய்த் திகழ்கிறார்.

தெய்வங்கள் வணங்கும் தெய்வம்

விநாயகர் முத்தொழில் நடாத்தும் மும்மூர்த்தி கட்கும் முதல்வராய் விளங்குகிறார். மூலாதாரத்திற்

குரியவராயிருப்பதுடன் ஆருதாரங்களில் அமரும் பிற தெய்வங்களுக்கும் தலைவராய் உள்ளார். சிவ கணங்களுக்குக் குருமூர்த்தியாய் உள்ளார். உலகங் களுக்கும் தேவர்களுக்கும் இன்பங்களுக்கும் ஆதியாய் உள்ள விநாயகரைப் பராபரனுகிய சிவபெருமானும், சரவணத்தில் தோன்றிய தகப்பன்சாமியும் போற்றி வணங்குகிருர்கள். உலகிலுள்ள சமயங்களில் எல்லாம் இவரே பரந்து நிற்பதால் அவ்வச் சமயத்தார்களின் வழிபாட்டிற் கேற்ற பயன்களை நல்குபவர் இவரே. எந்தத் தொழில் செய்பவருக்கும் அத்தொழிலின் பயனை ஊட்டுவிப்பவர் இவரே. எந்தத் தொழிலையும் இடையூறு போக்கி முற்றுவிக்க உதவும் சக்தி இவருக்கேயமைந்த தனிச்சிறப்பாகும்.

சித்திக் குஞ்சரன்

எந்தத் தொழிலைச் செய்யும்போதும் தம்மை முந்தி நினைப்பவர்க்கு அவர் முன்னின்று முயன்று அத்தொழில் முட்டின்றி இனிது நிறைவேற நல்லருள் புரிகின்ருர். செயற்கருஞ் செயலை மேற்கொண்டாலும் விநாயகரை நெஞ்சத்தில் முன்னதாக நினைப்பவர் எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் என்பது திண்ணம். விநாயகரை முதலில் நினைத்துத் தொழில் செய்ய முற்படுவோர் முன்வைத்த காலைப் பின்வைக்க வேண்டியநிலை ஏற்படாது. ஏனெனில் கருதியதளிக்கும் கற்பகக் களிறு எடுத்த காரியத்திற்கு வெற்றி ஏற்படும் சூழ்நிலைகளை உண்டாக்கித் தருகிருர். உன்னிய கருமம் முடித்துச் சித்திகள் அனைத்தும் உதவுகிருர். எடுத்த காரியம் யாவினும் வெற்றியே பெற விரும்பு

வோர் வெற்றிதருஞ் சுடரான விநாயகரை வேண்டு வாராக.

சிந்தையில் எண்ணி வணங்கும் நல்லடியவர் சித்தம் நினைத்தபடி செயம்பெற வரம் மிக உதவுபவர் வரசித்தி விநாயகர். கேட்டவற்றை யெல்லாந்தரும் கற்பகமரத்தைப் போல உலகமக்கள் விரும்புவன வற்றையெல்லாம் தருபவராதலின் 'போகதாதா' என்று போற்றப்படுகிறுர். வேண்டுவார் வேண்டப் பட்ட விழுப்பொருள் கொடுக்கும் தலைவரும், சுபகாரியங் களைத் தொடங்கி முடிப்பதற்கு முன்னே நிற்கும் முதல்வனும் இவரே.

விக்கின விநாயகர்

உலகத்தார் செய்கின்ற செயல்களுக்குரிய வினைப் பயனை ஊட்டுவிக்கும் விநாயகர், தம்மை வந்தனை செய்து போற்றும் வானுலகத்தார்க்கும், மண்ணுலகத் தார்க்கும் ஏற்படும் குறைகளை யெல்லாம் ஒழிப்பார். மந்திரங்களாலும் மருந்துகளாலும் நீங்காத பெரு நோய்களையும், ஆற்றுதற்கரிய மனத்துயரங்களையும் போக்குவார். தஞ்சம் என்று தம் அடியை அடைந் தவர்களின் இடர்களையும், சகலவித விக்கினங்களையும் தீர்த்து அருள் புரிவார். தீராத பிணியெல்லாம் தீர்க்கும் விநாயகரே பிறவிநோய்க்கும் மருந்தாக உள்ளார். அடியார்களின் பாவங்களை யெல்லாம் தீர்த்து முத்தியைக் கொடுப்பார். பிராரப்தம், சஞ்சிதம், ஆகாமியம் என்ற மூன்று வினைகளையும் வேரோடு ஒழித்துப் பிறப்பறுப்பார். அடியார்களின் அல்லலை அகற்றும் ஆனைமுகத்து அண்ணல் தம்மை நினைக்கும்

பலர்க்கும் இடையூறு தீர்த்தருளுவார். விநாயகரை வந்திப்பவரின் 'அல்லல்போம், வல்வினை போம், அன்னை வயிற்றிற் பிறந்த தொல்லை போம், போகாத் துயரம் போம்'.

தம்மைத் தொழுவோர்க்கு ஏற்படும் விக்கினங்களை யெல்லாம் அகற்றுபவராதலின் விக்கினகரன் (இடையூற்றை அழிப்பவன்), விக்கினராசன், விக்கின கிருது, விக்கினசமர்த்தன், விக்கினவிநாசனன், விக்கின நிவாரணன், விக்கினத்துவம்சன், விக்கினவிமோசகன், விக்கின வர்த்தனன், விக்கின நாதன் முதலிய பெயர்கள் இவருக்கு வழங்குகின்றன.

விநாயகர் எந்தக் காரியத்திற்கும் அதிகாரராய் இருப்பதால் விநாயகரின் திருவருளின்றி எத்தொழிலையுஞ் சிறப்புறச் செய்து முடிக்க முடியாது. காரியங்கள் இயற்றும்போது இடையில் ஏற்படும் இடையூறுகளைப் போக்கும் வல்லமையும் இவருக்கே உண்டு.

கருணையங் கடல்

விநாயகரின் கருணை அளவிடற்கரியது. அன்பர்கள் எவ்வெப்போது நினைத்தாலும் உடனே அவர்கள் உள்ளத்தில் தோன்றி அவர்கள் குறைகளை யெல்லாம் போக்கும் அருட்பண்புடையவர் அவர். அதனுல் பெருங்கருணைத் தெய்வம் என்றும், பெருங்கருணைப் பெம்மான் என்றும் பேசப்படுகிருர். எல்லாத் தெய்வங்களிலும் எளிமையானவர் விநாயகரே; வீடுகளில் உள்ளோர் மஞ்சளைக் கொண்டோ, இடித்தமாவைக் கொண்டோ, சாணத்தைக் கொண்டோ 'பிள்ளையா

பிடித்து' வைத்தால், அப்பொருள்களில் எல்லாம் தோன்றி வீற்றிருப்பார். ஊர்கள் தோறும் சந்தி சதுக்கங்களிலும், மரங்களின் அடியிலும் எவ்வித ஆடம்பரமுமின்றி வீற்றிருக்கின்றார். அவருடைய யானை முகம் கருணை யென்னும் மதமே சொரிகிறது. கருணை நாயகனான அவர் உண்மையன்புள்ள அன்பர் இதயங்களில் இமைப்பொழுதும் நீங்காது வாழ்கின்றார்.

முத்தி கொடுக்கும் முழுமுதல்

நாடோறும் தம்மைப் போற்றும் அடியார்கட்கு முடிவில் முடியாவின்பப் பேறான முத்தியைக் கொடுப்பவராதலின் முத்திவிநாயகர் என்று இவர் அழைக்கப் பெறுகிறார்.

மறக்கருணையும் புரிபவர்

தம்மைப் போற்றுபவருக்கு அறக்கருணை புரிந்து ஆண்டு கொள்வார். பொல்லார்க்கும் தானவர்க்கும் ஊறுகள் இழைப்பார். அழிவினுக்கு அழிவு செய்யும் ஆற்றல் வாய்ந்தவர்.

10. விநாயகரின் அருட்செயல்கள்

படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்து தொழில்களையும் இயற்றும் விநாயகரின் செயல்கள் யாவும் அருட்செயல்களே. எனினும் நூல்களுள் கூறப்படும் சில முக்கிய அருட்செயல்களை மட்டும் இங்கே காண்போம்.

கூத்தாடுதல்

செம்பொன் அம்பலத்தில் நடமிடும் ஞானக் கூத்தனைப்போல் விநாயகப் பெருமானும் கூத்தாடுதலை மேற்கொண்டுள்ளார். அதனால் கூத்தாடும் பிள்ளையார், நிருத்த கணபதி என்றெல்லாம் அழைக்கப் பெறுகிறார்.

உலகத்திலுள்ள அசையும் பொருள்கள் அசையாப் பொருள்கள் அனைத்திலுமுள்ள அணுக்கள் யாவும் இடை விடாது அசைந்து கொண்டிருக்கின்றன என்பதை விஞ்ஞானம் அறிந்துள்ளது. அண்ட சராசரங்கள் அனைத்தையும் ஆட்டுவிப்பவன் தானும் ஆட வல்லானுயிருக்க வேண்டுமென்பது நியதியன்றோ? அவன் ஆடுதலின்றேல் ஓரணுவும் அசையாது போய் விடுமன்றோ? எனவே பிள்ளையாரின் கூத்தாடும் அருட்செயலால் உலகங்கள் எல்லாவற்றையும் அவர் ஆட்டுவிக்கும் அருட்டிறம் புலப்படுகின்றது.

தேவாரத் திருமுறைகளைக் காட்டிக் கொடுத்தல்

சுந்தரமூர்த்தி நாயனுர் காலத்திற்குப் பிறகு (எட்டாம் நூற்றுண்டிற்குப் பிறகு) தமிழ் நாட்டில் நிலையான அரசாட்சி இல்லாமல் குழப்பநிலை ஏற்பட்டிருந்தது. பிற்காலச் சோழ அரசர்கள் வலுவான ஆட்சியை அமைக்கு முன்பு தமிழகத்தில் இலக்கியத்தையும் சமயத்தையும் போற்றுவார் தொகை குறைந்திருந்தது. அப்போது தேவாரப் பாடல்களுள் மறைந்தவை போக மீதமுள்ளவற்றையாவது பாதுகாக்க வேண்டுமென்று சிலர் அப்பாடல்கள் அடங்கிய ஏடு

களை யெல்லாம் தில்லைக் கோயிலுள் ஓரிடத்தில் மறைத்து வைத்திருந்தனர். அவ்வாறு பாதுகாப்பாக மறைத்து வைத்தவர் மறைந்துபோக அந்த ஏடுகள் வைக்கப்பட்டிருந்த இடம் பிறரால் அறியப்பட முடி யாது போயிற்று. பத்தாம் நூற்ருண்டில் திருநாரை யூர் நம்பியாண்டார் நம்பி அந்த இடத்தைக் கண்டு பிடிக்கப் பலவாறு முயன்றும் முடியாமல் போகவே ஒரு நாள் அவர் தம் வழிபடு கடவுளான விநாயகருக் குப் பலவகையான உணவுப் பொருள்களை யெல்லாம் படைத்து மனமுருகி வழிபட்டுத் தேவார ஏடுகள் இருக்குமிடத்தைத் தெரிவித்தருளுமாறு வேண்டிக் கொண்டார். பெருமானும் தம்மையே நம்பியிருந்த நாரையூர் நம்பி அன்புடன் படைத்த நிவேதனப் பொருள்கள் யாவற்றையும் தம் துதிக்கையை நீட்டி விரைந்து எடுத்துண்டு மகிழ்ந்தார். பிறகு சிதம்பரத் துக் கோயிலில் தேவார ஏடுகள் மறைத்து வைக்கப் பட்டிருந்த இடத்தை அவருக்குத் தெரியப்படுத்தினர்; என்ற வரலாறு வழங்கப்படுகிறது. இவ்வாறு தேவார ஏடுகளை வெளிப்படுத்திச் சைவசமயம் தழைத்து இனி தோங்க அருள்புரிந்த விநாயகருக்கே சைவப் பெரு மக்கள் அனைவரும் நாடோறும் முதற்பூசை செய்கின் றனர். விநாயகரை வணங்கிய பிறகே எச்செயலையும் செய்யத் துணிகின்றனர்.

தந்தையின் தேரச்சினை ஒடித்தது

அமரர்களுக்கெல்லாம் அளவிலாத அல்லல்களை அளித்து வந்த மூன்று அவுணர்களின் கோட்டை களாகிய திரிபுரங்களையும் அழிப்பதற்காகச் சிவ

பெருமான் தேரின்மீது இவர்ந்து சென்ருர். அந்த அசுரர்கள் மீது ஏற்பட்டிருந்த கடுஞ்சினத்தால் சிவ பிரான் விக்கினங்களைப் போக்கும் விக்கினேச்சுரனை மனத்தால் முதலில் நினைந்து போற்ற மறந்து விட்டார் போலும். நினைக்க மறந்தவர் தம் தந்தையே என்றறிந்தாலும் அதற்காகக் கண்ணேட்டஞ் செய் யாது களிற்றுமுகப் பண்ணவன் தந்தையின் தடந் தேரின் அச்சாணி ஒடிந்துபோகுமாறு செய்தார். அச்சாணி இல்லாத அத்தேர் முச்சாணும் ஓடவில்லை. அப்போதுதான் சிவபிரான் தம்முடைய காரியத்திற்கு இடையூறு நேர்ந்தமைக்குக் காரணம் விநாயகப் பெருமானைத் தாம் மறந்துவிட்டதே என்று உணர்ந் தார். பிறகு தமது சிரிப்பினுல் முப்புரத்தை எரித்தழித் தார். எல்லாம் வல்ல இறைவனும் தன்னுல் ஏற்படுத் தப்பட்ட தெய்வநியதிக்கு உட்படவேண்டும், இல்லை யேல் தெய்வநீதிக்கு ஆட்படவேண்டும் என்ற உண்மை விநாயகரின் இந்த அருட்செயல் மூலம் வெளிப்படுகிறது.

தம்பிக்கு உதவியது

ஆறுமுகம் படைத்த மூத்த பிள்ளையார் இளைய பிள்ளையாரான ஆறுமுகப் பெருந்தகைக்கு எப்போதும் உறுதுணையாய் இருந்து வருகிருர். முன்பு வள்ளி மலையில் தினைப்புனத்தைக் காத்த குறக்கொடியாம் வள்ளியின்மீது தெய்வக் காதல் கொண்டார் வேடரான வேலாயுதப் பெருமான். வேடம் பூண்டுவந்த அந்த வேடர் உண்மையில் அன்பர்கள் நினைத்த வேடங்களில் தோன்றும் நின்மலர் என்பதை அறியாத நிலையில்,

உயிரினும் சிறந்த நாணம் மீதூரப்பெற்று வள்ளிநாயகி முருகப்பெருமான் நெருங்கும் போதெல்லாம் அகன் ரேடினுள். பரம்பொருளைப் பற்றுக் கோடாகப் பற்றிக் கொண்டவரே உலகப் பற்றுக்களை யெல்லாம் விட்டுப் பேரின்பத்தைப் பற்றமுடியும் என்ற உண்மையை உலகுக்கு உணர்த்த விரும்பிய முருகப்பெருமான் வள்ளி தம்மைப் பற்றும்படி செய்வதற்கு உதவும்படி தமையனுரான கணபதியை ஒரு கணம் மனத்தில் தியானித்தார். உடனே வள்ளியின்முன் ஒரு பெருவேழம் பிளிறிக் கொண்டுவந்தது. உலகின் மாயா சக்திகள் எல்லாம் தாக்கும்போது அலமரும் சீவான்மாவைப் போல் அலறினுள் வள்ளி; வேறிடங் களுக்கெல்லாம் ஓடினுள். எங்கெங்கே சென்ருலும் அங்கெல்லாம் அந்த யானை அவளைத் துரத்திக் கொண்டே வந்தது. வேறு வழியின்றிக் கட்டழகுடன் நின்றிருந்த முருகப்பெருமானிடம் வந்து அவரது தோளைப் பற்றினுள்; பயம் நீங்கினுள். உடனே அவளைப் பயமுறுத்திய வேழமாகிய விநாயகர் தமது காரியம் முற்றுப் பெற்றதை யறிந்து மறைந்தார். இறையுணர்வினைப் பெருது மனம்போன போக்கெல் லாம் செல்லுவோரை நல்வழிப்படுத்த அச்சுறுத்தும் வழியை இறைவன் மேற்கொள்ளுவது அவனது மறக்கருணையின்பாற்பட்ட செயல் என்பதை விநாய கரின் இந்த அருட்செயல் நமக்கு உணர்த்துகின்றது.

மேலும் தேவர்கள், நான்முகன், இந்திரன் முதலிய பலர்க்கும், முனிவர்க்கும் எண்ணில்லாத துன்பங்களைச் செய்துவந்த சூரபன்மனையும், அவனது குலத்தையும் அழிப்பதற்கேற்ற வல்லமையை வேல

வனுக்குத் தந்து அவுணர்களை அழிப்பதில் அவருக்கு உறுதுணையாயிருந்தார் விநாயகர்.

காவிரியை உலகிற்குத் தருதல்

கற்பக மரங்கள் நிறைந்த பூங்காவைக் காத்து வந்த தேவர்கோனாகிய இந்திரன் அப்பூங்காவிற்கு வேண்டிய நீரை அளித்தருள வேண்டும் என்று விநாயகரை வேண்டிக் கொண்டான். சுரர்கோனின் வேண்டுகோளுக்கு இரங்கிய விநாயகர் ஒரு காகத்தின் உருக்கொண்டு அகத்தியர் கமண்டலத்திலுள்ள நீரைக் கவிழ்த்தார். அந்நீரே வானத்து நதியாகிப் பிறகு மண்ணுலகிற் பரந்து காவிரி நதியாகப் பெருக்கெடுத்தோடி வந்தது.

ஆறுகள் போன்ற இயற்கை வழங்குஞ் செல்வங்களையும் இறைவனின் அருட்கொடையாகக் கருதி அவற்றைப் போற்றுவது நம் நாட்டினர் மரபு. தமிழகத்தைப் புரக்கும் காவிரிக்குத் தெய்வத் தன்மை மிகுவதற்காகவே விநாயகரின் இந்த அருட்செயல் போற்றப் படுகிறது.

இந்திரனுக்கு உதவியது

நாடோறும் தம்மை வழிபட்டு வந்த இந்திரனுக்கு விநாயகப் பெருமான் ஒரு நாள் இதய உபதேசம் புரிந்தார்.

ஒருமுறை இந்திரன் மண்ணுலகில் கௌதம முனிவரின் மனைவியான அகலிகையின் அழகில் ஈடுபட்டுக்

காம மயக்கம் மேலிட்டுச் சூழ்ச்சி புரிந்து முனிவர் இல்லாத சமயத்தில் அகலிகையின் கையைப் பற்றினான். இந்திரனின் சூழ்ச்சியை உணர்ந்து விரைந்து இல்லந் திரும்பிய முனிவர் இந்திரனின் உடலில் ஆயிரம் குறிகள் ஏற்படுமாறு சபித்தார். அக் குறிகள் தன்னுடலில் ஏற்பட்டதைக் கண்டு இந்திரன் வெட்கமும் வேதனையு மடைந்தான். அமரர்கள் முன்பு எப்படி அமர்வது என்று வருந்தினான். தன் மனக் குறையைப் போக்கியருள வேண்டும் என்று ஐங்கரத்த முதை நோக்கி வேண்டினான். ஐங்கரப் பிள்ளையும் அமரர்கோன் உடலத்திலிருந்த ஆயிரங் குறிகளும் ஆயிரங் கண்களாக மாறுமாறு அருள்புரிந்தார்.

கொடுவினை செய்தோரும் இறை வழிபாட்டினை முறையே இயற்றின் அவ்வினையின் கொடுமையி லிருந்து தப்ப முடியும் என்பதையே விநாயகரின் இந்த அருட்செயல் நமக்குப் புலப்படுத்துகிறது.

இராவணனைப் பந்தாடியது

பத்துத் தலையும் இருபது கரங்களும் படைத்த இராவணன் உடல்பலம் மிக்கவன். சிவபிரான் வீற் றிருக்கும் கயிலைமலையினையே அசைத்தெடுக்க முற் பட்டவன். உலகத்தைத் தாங்கி நிற்கும் எட்டுத்திக்கு யானைகள் இராவணனின் மார்பில் பாய்ந்து முட்டிய போது அந்த யானைகளின் கொம்புகள் முறிந்தனவே யன்றி இராவணன் மார்பில் சிறிதுங் காயங்கூட ஏற்படவில்லை. அத்தகைய உடல் வலிமையும், வரம் பிலா வரங்களைப்பெற்ற தவவலிமையும் படைத்த அத் தசமுகனை விநாயகப் பெருமான் தமது துதிக்கையால்

அலாக்காகத் தூக்கிப் பந்தை வீசி எறிந்து விளையாடு வதைப்போல அவனைத் தூர எறிந்தார் என்ற செய்தி வாயு சங்கிதை, விநாயகர் பதிற்றுப்பத்தந்தாதி, பருணை விநாயகர் பள் முதலிய நூல்களில் கூறப்படு கின்றது.

வல்லமை மிக்க எவரினும் மேம்பட்ட சர்வ வல்லமை வாய்ந்தவர் விநாயகர் என்பதை இந்த அருட்செயல் தெளிவாக்குகிறது.

கயமுகாசுரனை வதைத்தல்

நல்லோரைக் காக்க அல்லோரை அழித்தல் இறைவனின் அருட்பண்பே. செம்மைநெறி நிற்ப வர்க்கு ஏற்படும் இடர்களைப்போக்கியருளும் புனிதனுன விநாயகப் பெருமான் அவர்களுக்கு இடையூறுகளை விளைக்கும் கொடியோரை அடியோடு தொலைக்கவும் முற்பட்டுள்ளார். கனலாசுரன், கோபச்சகாயன், கமலா சுரன் முதலிய அசுரர்களை யெல்லாம் அழித்தார். அரக்கர்களுள் பெரு வலிமை வாய்ந்தவனுகத் திகழ்ந்த கயமுகாசுரன் ஆனைமுகத்து ஐயனைப்போலவே ஆம்பல் முகமுடையவனு யிருந்தான். துட்டச் செயல்களை யெல்லாம் செய்து வந்தான். அக்கொடிய அரக்கன் தந்திமாமுகனின் பெருமை யறியாது சேனையரக்க ருடன் விநாயகரிடம் செருச் செய்ய வந்தான். ஆனை முகப்பிரான் தமது நால்வாயினுல் நெட்டுயிர்ப்புச் செய்த அளவில் அரக்கனின் படையினர் எல்லாம் கடலிலும், வானமுகட்டிலும் சென்று வீழ்ந்தனர். எனினும் பயமின்றிக் கழு ஏந்திய கையனுய்க் கயமுகா

சுரன் விநாயகரின் எதிரே வந்தான். விநாயகர் அவனைக் குடர் குழம்பத் துகைத்து உருட்டினர். அவனைக் கழங்குபோல் எறிந்து விளையாடினர். அவனை அடியோடு அழித்தால்தான் அமரர் குலம் உய்யும் எனக் கருதித் தமது தந்தத்தை ஒடித்து அவனது உடலைக் கிழித்தெறிந்தார். ஆனால் அக்கய முகாசுரன் பெருச்சாளி உருக்கொண்டு தப்பியோட முயன்றான். உடனே விநாயகர் அப்பெருச்சாளியின் மீது விரைவாய் ஏறி அமர்ந்து அவ்வசுரனை அடக்கி விட்டார். அந்த ஊர்தியின் மீது ஏறி உலகை வலம் வரும்பொழுது தேவர்கள் பூமாரி பொழிந்தனர்.

திருப்பாற் கடலை உறிஞ்சியது

திருமால் முன்பு ஆமை யவதாரங்கொண்டு அலை கடலைக் கலக்கிக் கொண்டிருந்தார். அப்போது பூமியில் இருந்தோர் அஞ்சி நடுங்கினர். மண்ணுலகத்தாரின் அச்சத்தைப் போக்க விரும்பிய விநாயகர் அந்த ஆமையையும் சேர்த்து அலைகடல் முழுவதையும் தம் துதிக்கையால் உறிஞ்சிப் பிறகு வெளியிட்டார். அதன் பிறகு அந்த ஆமையின் கொட்டம் அடங்கியது.

மற்றொரு சமயம் விநாயகர் விளையாட்டு நோக்குடன் திருப்பாற் கடல் முழுவதையும் தம் துதிக்கையால் உறிஞ்சினர். திருப்பாற் கடலில் பள்ளிகொண்டிருந்த பரந்தாமனும், அவரது திருவடியைப் பற்றி நின்ற திருமகளும், திருமாலின் படுக்கையாகிய பாம்பும், பாலகனாகிய நான்முகனும் செய்வது இன்னதென்று அறியாது திகைத்து மயங்கினர். விரைவில்

உறிஞ்சிய பாற்கடலை மீண்டும் உமிழ்ந்து அவர்களுக்கெல்லாம் மீண்டும் நல்வாழ்வை யளித்தார் யானைமுகப் பிரான்.

எல்லா உலகங்களும் விநாயகரின் அருட் சக்திக்கு உட்பட்டவையே என்பதை இத் திருவிளையாடல்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

தந்தையிடம் கனிபெற்றது

ஒரு சமயம் கயிலைமலைக் கடவுள் தம் இருபுதல்வர்களையும் அழைத்து ஒரு போட்டியில் அவர்களை ஈடுபடுத்தினர். உலகமனைத்தையும் முதலில் சுற்றி வருபவருக்கே தம் கையிலுள்ள கனியைப் பரிசாகத் தருவதாகக் கூறினர். அண்டங்கள் அனைத்தையும் விரைவில் வலம்வரும் தோகை மீதேறினர் குறத் தோகைபாகனான முருகன். மூத்தபிள்ளையாரோ "அண்டசராசரம் அனைத்தும் நீயே யாதலின் உன்னைச் சுற்றி வந்தால் உலகமெல்லாம் சுற்றிவந்தது போலாகும்" என்று கூறிக் குறுக்குவழியில் போட்டியில் வென்ருர். பரிசாகப் பெற்ற கனியை அவர் இன்னும் துதிக்கையில் ஏந்திக் கொண்டுதான் இருக்கிருர். கோபித்துச் சென்ற தம்பிக்குக் கொடுக்காமல் அவர் அதைத் தின்னமாட்டார் போலும்!

இத்திருவிளையாடலி லிருந்து 'அங்கிங்கெனுதபடி எங்கும் பரந்திருக்கும்' பரம்பொருளே எல்லா உலகங்களாகவும் இருக்கிருர்; எல்லா உலகங்களையும் இயக்கிவருகிருர் என்பது அறியப்படும்.

பிற அருட்செயல்கள்

திருமாலுக்கு ஏற்பட்டிருந்த பாம்புவடிவான சாபத்தைப் போக்கி அவருக்கு மேலும் பல வரங்கள் நல்கியதாகப் பருளே விநாயகர் பள் (42-16) குறிப்பிடுகிறது.

மதுகைடவர் என்ற அரக்கரை மாய்ப்பதற்குப் போதிய வல்லமையைத் திருமாலுக்கு அருளினுர் என்று விநாயகப் பதிற்றுப்பத்து (56) குறிப்பிடுகிறது.

ஒரு முனிவரின் தேவியான முகுந்தை என்பவளே வலியப் புணரவந்த மாங்கதமாராசனுக்கு அவளுடைய சாபத்தால் ஏற்பட்ட தொழுநோயைக் களைந்தார் என்று விநாயகர் கலிவெண்பா (200) விளம்புகிறது.

காசிபர்க்கும் அவருடைய மக்களுக்கும் காட்சி புரிந்து வரங்கள் நல்கினுர்.

'நானே பிரமம்' என்று தருக்குக் கொண்டிருந்த சனகருடைய அகந்தையை அழித்து நல்லறிவை யளித்துச் சனகர் உலகியல் வாழ்வில் பற்றற்று வாழும் பக்குவநிலையை அருளிச் செய்தார்.

விக்கினன் என்ற கொடியோனே வென்று அவனைக் கொண்டு பிற துட்டர்களைச் சிதைவித்தார் என்று குமரகோட்டப் பிள்ளைத்தமிழ் (4) கூறுகிறது.

உருக்குமாங்கதனுக்கு முக்தி வழங்கியதாக விநாயகர் பதிற்றுப்பத்தந்தாதி (59) கூறுகிறது.

விமராசனுக்கு உலகம் புகழும் மகவளித்ததாக மேற்குறிப்பிட்ட நூலே (58) கூறுகிறது.

மகாபலிச் சக்கரவர்த்திக்கு வானுலகம் முதல் எல்லா உலகங்களையும் ஒருங்கே ஆளும் வல்லமை அளித்தார்; அவனுக்கு முப்புரங்களையும் உரிமையாகக் கொடுத்துத் 'திரிபுரன்' என்ற பெயரையும் தந்தார் என்றும் அந்நூல் (60) கூறுகிறது.

தேவலோகத்துக் காவலனான இந்துகாந்தன் உடலில் தீவினைப் பயனால் தோன்றிய வெந்தொழு நோய் தீருமாறு அருட்கண் பார்த்தருளினார் என்று சிறுக்குளம் விநாயகர் அந்தாதி (12) செப்புகிறது.

11. மேருவில் எழுதிய பாரதக் கதை

அடியார்க்குப் பணி செய்தல்

ஐந்தாம் வேதம் என்று பாரதமக்கள் போற்றும் மகாபாரதக் கதையினை அன்பிற்சிறந்த அடியாரான வேதவியாச. முனிவரர் சொல்லச் சொல்லத் தம் தந்தை வில்லாக வளைத்த அந்த மாமேரு மலையில் அதை முழுதும் எழுதிவைத்தார் விநாயகப் பெருமான். மாணிக்கவாசகரின் திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் திருச்சிற்றம்பலவரான நடராசப்பெருமான். அன்புடன் ஏட்டில் எழுதிவைத்த சிறப்பினையும் நாம் கேட்டிருக்கிறோம். அதுபோல் தவச்சிறப்பு மிக்கவரும், பலவகைப் புராணங்களை இயற்றியவருமான வியாசமுனிவர் குருநாடர் கதையை

வடமொழியில் ஒரு இலட்சத்து இருபத்தையாயிரங் கவிதைகளாக விரித்துரைத்ததை விநாயகர் தம்முடைய தந்தங்களுள் ஒன்றை ஒடித்து அதை எழுத்தாணியாகக் கொண்டு என்றும் அழியாதபடி வடமேரு மலையாகிய ஏட்டில் முத்து முத்தாக எழுதிவைத்தார். இதை ஒரு புலவர் "பாரத்தவத்தோன் சொல் பாரதத்தைக் கோடு ஒடித்துப் பாரப்பனிவரையின் பால் வரைந்த தீரன்" என்று அழகாகக் குறிப்பிடுகின்ருர்.

யார்கொலோ சதுரர்?

ஆயிரஞ் சிகரங்களையுடைய கனகவரையில் அந்த மாபெருங் கதையை விநாயகர் எழுதியருளியமை அவர் பழவடியார்க்கு இன்பமுடன் அருள்தரும் பான்மையையே குறிப்பிடுகின்றது என்று சீகாழிப்புராணம் குறிக்கின்றது. ஐங்கரச் செல்வனுர் பாரதப் பெருங் கதையைத் தம் ஐந்து கரங்களாலும் எழுத முன் வந்ததே ஒரு பெருஞ்சிறப்பாகும். அதனினும் பெருஞ் சிறப்பு கல்லின்மீது எழுதுவதற்குத் தம்முடைய தந்தங்களுள் ஒன்றை ஒடித்துத் தம் உடம்பில் ஊனம் ஏற்படுவதையும் பொருட் படுத்தாமல்—தம்மை ஒற்றைக் கொம்பன் என்று பலரும் இகழ்ந்துகூற நேரும் என்பதையும் பொருட்படுத்தாமல்—தம் உடலுறுப்பைத் தியாகம் செய்ததாகும். தம் உடல், உயிர், உடைமை முதலியவற்றைத் தமக்களித்த அப்பரம் பொருளுக்கே அர்ப்பணம் செய்துவிடுவோர்களுக்கு ஆண்டவனும் தன்னையே அவர்களுக்கு அளிக்க முன்வருகிருர் என்ற பேருண்மையை விளக்குகிறது விநாயகரின் இவ்வருஞ் செயல். அன்பர்க்கு அவரி

னும் மிக்க அன்பினராகத் திகழ்கிறார் விநாயகர் என்பதும் குறிக்கொள்ளத் தக்கது.

12. விநாயகரின் அடியார்கள்

எண்ணிய எண்ணியாங்கு எய்த விழைபவர் எல்லாரும் தாம் எடுத்த காரியங்களுக்கு ஏற்படும் இடையூறுகளை யெல்லாம் போக்கவல்ல விநாயகப் பெருமானைத் திண்ணமாக எண்ணுவர். சிறப்பாகப் பாவலர்கள் வித்தைக்கு இறைவனான இப்பரனையே முதலில் பரவுவர். நத்திடும் அடியார்க்கு அருளும் நாதனாகவும், நம்பினோர் இடர்தீர்க்கும் உபாயராகவும் இப்பெருமான் விளங்குகிறார். அன்பு கொண்டு நாளும் வழிபடுவோர்க்கு எய்ப்பிடத்தின் வைப்பாக—காலத்தில் உதவும் செல்வமாகத் திகழ்கிறார். மனமார வழிபடும் அடியவர்கள் இயற்றும் நல்ல செயல்கள் யாவும் நன்கு நிகழ்வதற்குரிய அருள்புரிவதையே தம் கடனாகக் கொண்டுள்ளார்.

அன்பர் உளச்சோதி

இளங்களிறான இப் பெருமான் அடியார்களின் உள்ளத் திருக்கோயிலில் மேவி விளையாடுவதை விருப்பமாகக் கொண்டுள்ளார். இவர் அன்பர் மனமாகிய கட்டுத்தறியினின்று உலாவும் கருணையாளர். நைந்துருகும் அன்பர் தம் அகம் விட்டு அகலாதவர். முத்தர் அகத்து உற்று ஒளிரும் முச்சுடர். என்பெலாம் நெகிழ்ந்து உருகுபவர்களின் இதயம் விட்டுச் செல்லாத பெருவாழ்வு. பாதந்தொழும் அன்பர்

மனத்திினின்றும் ஏதங்கள் அகன்றிடச் செய்பவர். ஊனம் ஒன்றுமில்லாத உத்தமர். உள்ளத்தே ஓங்கு சீர்ப் பிரணவ ஒளியாக ஒளிர்பவர், வஞ்சம் அற்ற அன்பர் உள்ளத்தில் நிலையாக வீற்றிருந்து அவர்களின் தீவினைகளை மாற்றுவார். அன்பர்களைக் காப்பதற்கே அத்தி முகனாய் உதித்துள்ளார். துதிக்கின்ற அன்பர்க்கு இன்பம் அருளி அவர்களைக் காப்பதே அவருடைய துதிக்கையின் முக்கிய வேலை. மெய்யடியார்க்கு இன்பம் செய்து அவர்களை ஆட்கொண்டருளுவதே அவருடைய அருட் பண்பு. போற்றும் அடியார் குறைகளைப் போக்கியருளுவார். ஆணவமற்ற அடியார்க்கேயன்றி மற்றையோர்க்கு அகப்படாதவர். அடியார் காட்டும் அன்பினும் பன்மடங்கு அவர்களிடம் காட்டும் அருட்பண்பினர். குருவாய் வந்து அன்பர் மனக் கோயிலில் குடி கொண்டிருப்பார்.

அடியாரிடமிருந்துபோக்குவன

சந்ததமும் தம்மைப் போற்றும் அடியார்க்கு இரங்கும் புண்ணியனான இப் பெருமான் அடியார்கள் மனத்தின் அறியாமையாகிய இருளைப் போக்குகின்றார். 'போற்றி' என்று தொழுவார் துயரங் கழுவிடுவார். அடியாரின் சோகத்தைப் போக்குவார். குணப்பெருங் குன்றமான அவர் அன்பாளர்தங் குறைகளைத் தவிர்ப்பார். அடியார்களுக்கு ஏற்படும் இடர்களைத் தீர்ப்பார். சித்தத்தில் சிந்தித்துத் தம்மைத் தியானஞ் செய்து இறைஞ்சி மெய்த்தொண்டு புரியும் அன்பர்களின் விக்கினங்களை அகற்றுவார். ஆசையுடன் மலரடிகளை நன்னீரால் நீராட்டி, வாசமுள்ள நல்ல மலர்களைத்

தூவி வணங்கி வாழ்த்தும் அடியார்களின் பாச வினைகளைக் களைந்தருளுவார். ஊழ்வினை உருத்து வந்து ஊட்டுமாயினும், மூலகாரணமான விநாயகர் தம்மை நினைத்து அன்போடு துதித்து நின்றோரின் வினைத் துன்பத்தை மாற்றுவார்; கும்பிடுவாரின் பிராரப்த வினைகளை அறவே அறுத்து அருள் செய்வார்.

அடியார்க்கு அருள்வன

அடியார் உளத்தில் குடியாயிருக்கும் ஐங்கரன் தம் அன்பர் கருதி நினைத்ததை யெல்லாம் முடிக்க அருள் புரிவார். தாசர்க்கு அருளுந் தயாளரான அவர் மெய் யடியார்க்கு ஆனந்தப் பெருவாழ்வினை அருளுவார். குட்டிப் பணிந்து ஏத்துங் கோதிலாத் தொண்டருக்கு மட்டில் வரமளிப்பார். தவமது செய்து தன்னை யடைந் தவர்க்கு அரிய சிவசுகம் அருளுவார்; தம்மைப் பணிந்தவர்க்கு அட்டாங்க யோகம் தருவார். முத்தர்கள் போற்றும் முன்னவனாகிய அவர் தம்மைச் சரண் என்று அடைந்தோர் இனி இவ்வுலகில் பல்வகைப் பிறப்புக்களிலும் பிறந்திறந்து உழலா வண்ணம் அவர்களுக்கு மேலாம் பதமான வீடு பேற்றினை அளிப்பார்.

அருள்பெற்ற அவ்வையார்

சேரமான் பெருமாள் நாயனாரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தேர், கரி, குதிரை ஆகியவற்றில் ஊர்ந்து கயிலாயஞ் செல்லும்போது தாமும் கயிலைக்குச் செல்ல விருப்பங் கொண்டார் செந்தமிழ்க் கிழவியான அவ்வையார். அவ்வைக்கு இனியானாகிய விநாயகப் பெருமானும் நல்ல அமுது செய்தூட்டிய அம்முதி

யாளை அவர்கள் இருவரும் சென்று சேருமுன்பே கயிலாயத்தில் சேர்த்து விட்டார்.

பிற அடியார்கள்

திருநாரையூரில் நம்பியாண்டார் நம்பி விநாயகரை நாளும் வழிபட்டு வந்தார். சைவத் திருமுறைகளான தேவாரப் பதிகங்கள் அடங்கிய ஏடுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்த இடத்தை விரலை நீட்டிச் சுட்டிக் காட்டியும், திருவாய் மலர்ந்தும் அவற்றை நம்பிக்குத் தெரிவித்து வெளிப்படுத்தி யருளினுர்,

முற்காலத்தில் பலவகைப் புராணங்களையும் இயற்றிய வேதவியாசருக்கு உபதேசம் புரிந்தார். முற்கலன் முதலிய பல முனிவர்கள் வீடுபேற்றினை அடையும்படி அருள் புரிந்தார்.

ஏழரை யாண்டுகள் கொடுங் கலியின் வலியினுல் சிந்தை தளர்ந்து மெலிந்து வருந்திய நளன் பல நாடுகள் எல்லாம் திரிந்து பின் திருநள்ளாற்றுக்குச் சென்று கனிமலராதிகள் படைத்து வழிபாடு செய்ததால் நளகூபக் கணபதி நளனுடைய துன்பங்களையெல்லாம் போக்கிப் பல வரங்கள் தந்து நளன் இழந்த நாட்டினை அவன் மீண்டும் பெறவும், பலவகைச் செல்வங்களையும் பெறவும் அருள்புரிந்தார்.

மேலும் திருஞான சம்பந்தர், அப்பர், ஆரூரர், ஆதிசங்கரர், கம்பர், கபிலர், மெய்கண்டார், அருணகிரியார், சிவஞானி முதலிய பலருக்கும் விநாயகர் தண்ணருள் புரிந்துள்ளார்.

13. விநாயகரின் பெருமை கூறும் நூல்கள்

1. விநாயக புராணம்.

புராண முறைப்படி விநாயகரின் அருட்பெருமைகளைக்கூறும் நூல் தமிழில் இதைத்தவிர வேறொன்றும் இல்லை.

விநாயகர் பலவேறு காலங்களில் பல்வேறு அவதாரங்களைச் செய்து, கொடியோர்களை யெல்லாம் மறக்கருணையால் தண்டித்தும், தம்மை வழிபட்ட அன்பினர்க்கு அறக்கருணையால் அருள்புரிந்தும் வந்திருக்கின்றார் என்று இந்நூல் விரித்துரைக்கிறது.

விநாயகர் 'வக்கிரதுண்ட விநாயகராக' அவதாரஞ் செய்து பிரம்மா, விட்டுணு, உருத்திரர் ஆகிய மும்மூர்த்திகளையுந் தோற்றுவித்துப் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களையுந் தந்தருளினார்.

'சிந்தாமணி விநாயகராகத்' திருவவதாரஞ் செய்து கபில முனிவருடைய சிந்தாமணியைக் கவர்ந்த கனகராஜனிடம் போர்க் கோலம் பூண்டு சென்று அவனை வென்று அச் சிந்தாமணியை மீட்டும் அவர்க்களித்தார்.

'கசானன விநாயகர்' பிரம்மாவின் கொட்டாவியிலிருந்து தோன்றிய சிந்தூரன் என்னும் அசுரனைக் கொன்று தேவர்களைக் காத்தருளினார். 'விக்கினராஜ விநாயகர்' அவதாரஞ் செய்து காலரூபன் என்கிற விக்கினனை அழித்து உலகங்களைக் காத்தருளினார்.

'மயூரேச விநாயகர்' வேதசாத்திரங்களைத் தேவர்களிடத்தினின்றுங் கவர்ந்த கமலாசுரனைச் சங்கரித்து, மீண்டும் அவ்வேதசாத்திரங்களைத் தேவர்கட்குத் தந்தருளினர்.

'உபமயூரேசராக' அவதாரஞ்செய்து தேவர்களைச் சிறையில் வைத்த சிந்தாசுரனைக் கொன்று, மற்றைய அவுணர்கள் செய்யும் மாயையினை ஒழித்தார்.

'பாலசந்திர விநாயகர்' அவதாரஞ் செய்து தவராசனுக்கும், அவன்மனைவி சுமுதைக்குந் தீங்கு செய்த தூபராசனைக் கொன்று அவ்விருவரையும் பாதுகாத்தார்.

'கணேச விநாயகர்' திரிபுராதிகளை வெல்லும்படியாகச் சிவபிரானுக்கு அருள் புரிந்தார்.

'கணபதி விநாயகர்' தேவர்களை வருத்திய கயமுகாசுரனைக் கொன்று விட்டுணு சாபந் தீர்த்தார்.

'மகோற்கட விநாயகர்' நராந்தகனையும் தேவாந்தகனையும் நாசஞ் செய்து காசிராசனுக்கு முத்தியளித்தார்.

'துண்டி விநாயகர்' துராசதனை வென்று விசுவநாத மூர்த்திக்குக் காசிநகரை அளித்தார்.

வல்லபை கணேசர் அவதாரஞ் செய்து மரீசி முனிவரின் மகளான வல்லபையினையும், திருமாலின் புதல்விகள் பன்னிருவரையுந் திருமணஞ்செய்து,

அத்திருமாலுக்கு யோகஞான தத்துவப் பொருள்களைப் போதிக்கும் கணேச கீதையைப் போதித்தார்.

இச்செய்திகளை யெல்லாம் விநாயகபுராணம் விரித்துரைக்கிறது. இந்நூலைத் தமிழில் இயற்றியவர் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த கவிராட்சச கச்சியப்ப முனிவராவர். இந்நூல் 18ஆம் நூற்றுண்டில் இயற்றப்பட்டது.

விநாயக புராணத்தை அழகிய தமிழ் உரை நடையில் முத்துசாமி முதலியார் என்பவர் 950 பக்கங்களில் 1933-இல் வெளியிட்டார். செய்யுள் நடையில் விநாயக புராணத்தைப் படிக்க முடியாதவர்கள் உரைநடையிலுள்ள இந்த நூலைப் பயின்று பயன் பெறலாம்.

2. காஞ்சிப்புராணம்

மாதவச் சிவஞான முனிவரால் இயற்றப்பெற்ற தமிழ்ச்சுவை மிக்க இப்புராணநூல் விநாயகரின் அவதாரத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறது :

'ஒருமுறை சிவபிரானும் உமாதேவியும் உய்யானம் சென்றனர். அங்கேயிருந்த 'மந்திரசாலா' என்ற மண்டபத்தில் ஒரு பிரணவம் எழுதப்பெற்றிருந்ததைக் கண்டனர். இருவரும் அதனை உற்று நோக்கினர். அப்போது அப்பிரணவ உருவம் பிரிந்தது; சிவபிரானுக்குரிய எழுத்தாகிய அகரம் களிருகவும், தேவியின் எழுத்தாகிய உகரம் பிடியாகவும் ஆயின. அவையிரண்டும் கூடின. விநாயகர் தோன்றினர்.''

3. கந்தபுராணம்

கந்தவேளின் பெருமைகளையெல்லாம் எடுத்துக் கூறும் இந்நூல் கச்சியப்பசிவாசாரியரால் இயற்றப் பெற்றது. கந்தனுக்கு முன்பிறந்த கற்பகமாக விநாயகரின் தோற்றத்தையும் இந்நூல் விரித்துரைக்கிறது (கயமுகன் உற்பத்திப் படலம்). இங்கே காணப்படும் விநாயகரின் அவதாரக் கதை காஞ்சிப்புராணத்திற் காணப்படுவது போன்றதே.

4. 'கணபதி'

மகாவித்வான் உயர்திரு ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் இயற்றிய இந்த அரிய ஆராய்ச்சிநூல் விநாயக பக்தர்களுக்கு மிகவும் இன்றியமையாத ஒரு நூலாக விளங்குகிறது. இந்நூல் 1956 ஆம் ஆண்டு திருவாவடுதுறை ஆதீன வெளியீடாக வெளிவந்துள்ளது.

ஆசிரியர் இந்நூலில் பிள்ளையார் வழிபாடு தமிழகத்தில் தோன்றிய வரலாற்றைப் பற்றியும், பிள்ளையார் வணக்கம் தமிழ்நாட்டுமக்களின் குருதியில் எவ்வாறு கலந்துள்ளது என்பது பற்றியும் விளக்கிக் கூறியுள்ளார். பிள்ளையார் பிறப்பைப்பற்றிச் சிவபுராணம், மத்ஸ்ய புராணம், சுப்பிரபேதம், காஞ்சிப்புராணம், விநாயக புராணம் முதலிய நூல்கள் கூறுவனவற்றைக் குறிப்பிட்டு அவை கூறும் வெவ்வேருன கருத்துக்களின் உண்மைநிலை என்ன என்பதையும் அறிவுறுத்தியுள்ளார். விநாயகரின் திருவுருவத்தின் ஒவ்வொரு அங்கத்திற்குமுரிய தத்து

வங்களையும் விளக்கிக் கூறுகிறார். புராணங்களில் விநாயகரின் வீரச் செயல்களாகக் குறிக்கப்பெற்ற வற்றையும், விநாயகரை வழிபட்டுப் பயன்பெற்றோர்களைப் பற்றியும் விரிவாக எடுத்தியம்பியுள்ளார்.

இந்நூலில் விநாயகரின் 32 வகையான திருவுருவங்கள் அழகான 'வண்ணப்படங்களாக வரைந்து காட்டப் பெற்றுள்ளன. இத்திருவுருவப் படங்கள் யாவும் வழிபாட்டிற்கு வைத்துக்கொள்ளக் கூடிய வகையில் அமைந்துள்ளன. இவற்றைப்பற்றிய விளக்கங்களும் இந்நூலில் உள்ளன. விநாயகருக்குரிய 29 ஆயுதங்கள் படங்களுடன் விளக்கி வரையப் பட்டுள்ளன. ஆகம முறைப்படி விநாயகரை உபாசிக்கும் முறைகளும், உருச்செபிப்பதற்குரிய மந்திரங்களும் இங்கே கூறப்படுகின்றன. பல்வேறு யந்திரங்களின் படங்களும் வரைந்து காட்டப் பெற்றுள்ளன.

விநாயகருக்குரிய விரதங்களைப்பற்றியும் அவற்றை மேற் கொள்ளும் முறைகள் பற்றியும், அவற்றால் எய்தும் பயன்கள் பற்றியும் ஆசிரியர் விளக்கியுள்ளார். மேலும் நம் நாட்டிலும் பிற நாடுகளிலும் உள்ள விநாயகரின் சிறந்த தலங்களைப் பற்றியும் குறிப்புக்கள் கொடுத்துள்ளார்.

விநாயகரைப் பற்றித் தமிழில் இதுவரை வெளி வந்த நூல்களுள் ஒப்பற்ற சிறப்புடையதாக இந்நூல் இலங்குகின்றது.

5. முத்த நாயனார் இரட்டை மணிமாலை

திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ள இந்நூல் கபில தேவ நாயனாரால் இயற்றப் பெற்றது. இருபது பாடல்

கள் இதில் உள்ளன. அனைத்தும் மனப்பாடம் செய்து நாடொறும் ஓதுதற்கு இனியவாகத் திகழ்கின்றன.

6. மூத்த பிள்ளையார் மும்மணிக்கோவை

இதுவும் பதினோராந் திருமுறையிற் காணப்படும் நூலே. அதிராவடிகள் இயற்றியது. முப்பது பாடல்களுள் 23 பாடல்களே கிடைத்துள்ளன. இஃது பக்திச் சுவையும் இலக்கியச் சுவையுங் கலந்த நூல்.

7. திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை

நம்பியாண்டார் நம்பி இயற்றியுள்ள இவ்வரிய நூல் பதினோராந் திருமுறையிற் சேர்க்கப்பெற்றுள்ளது. இதில் காணப்பெறும் இருபது பாடல்களும் ஓதுதற்கு எளிதாய் இன்பம் பயப்பனவாய் உள்ளன.

8. பிற நூல்கள்

விநாயகரைப் பற்றித் தமிழில் எத்துணையோ நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் திருப்பராய்த்துறைத் தபோவனத்தைச் சேர்ந்த சுவாமி சித்பவானந்தர் அவர்கள் இயற்றியுள்ள இறைவனின் திருவுருவங்கள் என்ற நூல் குறிப்பிடத் தக்கது. காரைக்குடி உயர்திரு சா. கணேசன் அவர்கள் பதிப்பித்து வெளியிட்டுள்ள 'பிள்ளையார் பட்டி வரலாறு' என்ற நூலும் பிள்ளையாரின் பெருமைகளை ஒல்லும் வகையால் விளக்குகிறது. கீழ்க்கண்ட செய்யுள் நூல்கள் விநாயகரைப் போற்றுவனவாய் உள்ளன.

ஐங்கரமாலை, கணபதியந்தாதி, கணேச புராணம், கரையேற விட்ட கற்பக விநாயகர் பதிகம், கலங்காத கண்ட விநாயகர் விண்ணப்பமாலை, கள்ள விநாயகர் பதிகம் (அபிராமி பட்டர் இயற்றியது), கற்பக விநாயகர் சதகம், கற்பக விநாயகர் தோத்திரம், காசித் துண்டி விநாயகர் திருவருட்பா, சங்கர விநாயகர் துதி, சந்தி விநாயகர் இரட்டைமணிமாலை சந்தி விநாயகர் கொம்மைப் பாடல், சந்தி விநாயகர் பதிகம், சித்தி மங்கள விநாயகர் தோத்திரம், சித்தி விநாயகர் பதிகம், தில்லை விநாயக வெண்பா, நல்லாற்றூர் விநாயகப் பெருமான் பதிகம், பருளை விநாயகர் பள், பிரசன்ன விநாயகர் தோத்திரம், பிரசன்ன விநாயகர் பதிகம், பெரிய பிள்ளையார் இரட்டை மணிமாலை, பொல்லாப் பிள்ளையார் திருவிரட்டை மணிமாலை, மதுரைச் சித்தி விநாயகர் பதிகம், மயிலைச் சித்தி விநாயகர் பதிகம், முத்தி விநாயகர் அந்தாதி, விநாயகர் அகவல் (ஔவையார் இயற்றியது), விநாயகர் அகவல் (நக்கீரர் இயற்றியது), விநாயகர் அஷ்டகம், விநாயகர் கலிவெண்பா.

*

இந்நூலாசிரியரின் பிற நூல்கள்

*

அடுக்குமொழி அகராதி	விலை ரூ.	3	00
எதிர்ப்பத அகராதி	,,	2	00
ஒலிக்குறிப் பகராதி	,,	1	75
திருமகள் அருட்செல்வம்	,,	2	25
கலைமகள் அருட்செல்வம்	,,	1	00
விநாயகர் அருட்பெருமை	,,	1	20
விநாயகரின் ஆயிரந் திருநாமங்கள்	,,	1	00

கிடைக்குமிடம் :

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை-1.

பாரி அச்சகம், சென்னை-1.